வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 03 | 24.09.2022 சனிக்கிழமை | இதழ் : 289 | பக்கங்கள் : 16

# இலங்கைக்கு மீண்டும் காலஅவகாசம்!

## மனித உரிமை பேரவையிடம் 'கோர்' நாடுகள் முன்மொழிவு

- அதிகாரப் பகிர்வை உறுதி செய்க
- ஆணைக்குழுக்களுக்கு சுதந்திரம்
- வன்முறைகள்மீது சுயாதீன விசாரணை
- நாணய நிதிய ஒப்பந்தத்துக்கு வரவேற்பு

ஜெனிவா, செப்ரெம்பர் 24

மனித உரிமைகள் தொடர்பான பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதற்கு அரசாங்கத்துக்கு அதிக கால அவகாசம் வழங்க முன்மொழிவதாக மனித உரிமைகள் பேரவையிடம் வரைவு மூலம் 'கோர்' நாடுகள் வெளிப்படுத்தின.

15

## வாக்குறுதிகளை நிறைவேற்றுங்கள் தேசிய பேரவையில் இணைகிறோம்!

■ பிரதமரிடம் தமிழ் தேசிய கட்சிகள் கூட்டாக தெரிவிப்பு

கொழும்பு, செப். 24

அரசியல் கைதிகள் விடுதலை, கல்முனை வடக்கு பிரதேச செயலக விவகாரம் - திருக்கோணேஸ்வரம், குருந்தூர்மலை பிரச்னைகளுக்கு தீர்வுகளை முதலில் தாருங்கள் தேசிய பேரவையில் இணைவது குறித்து சிந்திக்கிறோம் என்று தமிழ்த் தேசிய கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரதமர் தினேஷ் குணவர்த்தனவிடம் கூட்டாக தெரிவித்துள்ளனர்.

பிரதமர் தினேஷ் குணவர்த்தனவின் அழைப்பின்பேரில் நேற்று பாராளுமன்றில் பிரதமரின் அலுவலகத்தில் இந்த சந்திப்பு இடம்பெற்றது. இதில், தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் க. வி. விக்னேஸ்வரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் த. சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன், சார்ள்ஸ் நிர்மலநாதன், கோவிந்தன் கருணாகரம், த. கலையர

15

## வல்லிபுர ஆழ்வார் கொடியேற்றம் இன்று!

வடமராட்சி செப். 24

வரலாற்றுப் புகழ் பெற்ற வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா இன்று சனிக்கிழமை காலை 8. 45 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து, 17 தினங்கள் நடைபெறும்

15

## கல்முனை வடக்குக்கு விரைவில் கணக்காளர்!

பிரதமர் தமிழ் எம். பிக்களுக்கு உறுதி

கொழும்பு, செப். 24

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்கு விரைவில் கணக்காளர் ஒருவரை நியமிப்பதாக தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் பிரதமரும் பொது நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன உறுதியளித்துள்ளார்.

பிரதமர் நேற்றைய தினம் பாராளுமன்றில் தமிழ்த் தேசிய கட்சிகளின் எம். பிக்

15

## பாதிக்கப்பட்டோரின் கோரிக்கையை பிரேரணையில் உள்வாங்க வேண்டும்!

■ தமிழ்த் தேசிய கட்சிகள் வலியுறுத்து

யாழ்ப்பாணம், செப். 24

பாதிக்கப்பட்ட தரப்பினர் என்ற ரீதியில் முன்வைக்கும், குற்றவாளிகளை சர்வதேச நீதிமன்றத்துக்கு பாரப்படுத்தும் எமது பிரதான கோரிக்கையை மனித உரிமைகள் பேரவை தீர்மானத்தில் உள்ளடக்க வேண்டும்.

இவ்வாறு ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகளை வலியுறுத்தி தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் கடிதம்

15

## பிரான்ஸில் இலங்கையர் கொலை!

பாரிஸ், செப். 24

பிரான்ஸின் லா கொர்னேவ் பகுதியில் கத்தியால் வெட்டப்பட்ட காயங்களுடன் இரண்டு இலங்கையர்கள் காரிலிருந்து மீட்கப்பட்டனர். அவர்களில் ஒருவர்

15

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் ஆயுதபடைகளால் ஒடுக்கப்படுகின்றனர்!

மனித உரிமை பேரவையில் கஜேந்திரன் எம். பி.

ஜெனிவா, செப். 24

"காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தொடர்ச்சியாக இலங்கையின் ஆயுதப் படைகளால் அடக்கி ஒடுக்கப்படுகிறார்கள்" என்று ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது கூட்டத் தொடரில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் பிரதான அமர்வில் விடயம் 3இன் கீழ் அனைத்து மூத்த பிரஜைகளும் சகல மனித உரிமைகளையும் அனுபவிப்பதை உறுதிப்படுத்துவதற்கான விசேட நிபுண

15



## காணிகளை விடுவிக்குமாறு கோரி வலி. வடக்கு மக்கள் ஆர்ப்பாட்டம்!

மயிலிட்டி, செப். 24

கடந்த 30 வருடங்களாக வலி. வடக்குப் பகுதியில் விடுவிக்கப்படாமல் இருக்கும் மூவாயிரம் ஏக்கர் காணிகளை விடுவிக்குமாறு கோரி மயிலிட்டியில் நேற்று போராட்டம் முன்னெடுக்கப்பட்

15

## சிறுவர் இல்லங்களில் சேருவோர் தொகை வடக்கில் திடீர் உயர்வு!

யாழ்ப்பாணம், செப். 24

வடக்கில் அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் சிறுவர் அபிவிருத்தி நிலையங்களில் சேர்க்கப்படும் பிள்ளைகளின் எண்ணிக்கை திடீரென உயர்ந்துள்ளது. பொருளாதார நெருக்கடியால் பெற்றோர்களே தங்கள் பிள்ளைகளை நிலையங்களில் ஒப்படைத்து வருகின்றனர்.

வடக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை மற்றும் பராமரிப்பு திணைக்களம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் பெற்றோரால் பராமரிக்க முடியாது சிறுவர் அபிவிருத்தி நிலை

15

## தேசிய பேரவையின் உறுப்பினர் விவரம்!

■ அறிவித்தார் சபாநாயகர்

கொழும்பு, செப். 24

அனைத்து கட்சிகளையும் இணைத்து அமைக்கப்படவுள்ள தேசிய பேரவையின் உறுப்பினர்களின் விவரங்களை சபாநாயகர் நேற்று பாராளுமன்றில் அறிவித்தார்.

தேசிய பேரவையில் ஒவ்வொரு கட்சிகளுக்கும் ஒவ்வொரு பிரதிநிதிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

முன்னதாக, தேசிய பேரவையின் தலைவராக சபாநாயகரும் மற்றும்

15

## இப்படியும் நடக்கிறது...!

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனை பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து நீக்குவது தொடர்பில் கலந்துரையாட குழு நியமிக்கப்பட்டுள்ளது என்று வெளியாகும் தகவல் உண்மைக்கு புறம்பானது என்று கூட்டமைப்பின் யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

இதுதொடர்பாக நேற்று முன்தினம் இந்தப் பத்தியில் குறிப்பிட்டிருந்தது வாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாம். ஆனால், அப்படி அவரை பதவியிலிருந்து நீக்குவது தொடர்பில் கலந்துரையாடுவதற்காக அல்ல என்று தெரிவித்த அவர் எதற்காகக் குழு அமைக்கப்பட்டது என்றும் சொல்லியிருக்கின்றார்.

திருகோணமலை திருக்கோணேஸ்வரர் ஆலய சூழலில் இடம்பெற்று வருகின்ற அத்துமீறிய நிர்மாணப் பணிகள் தொடர்பில் இந்த கூட்டத்தின்போது விடயங்கள் முன்வைக்கப்பட்டன என்றும் இது தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தனுடன் கலந்துரையாடுவதற்கு தீர்மானிக்கப்பட்டது என்றும் அவர் விளக்கமளித்திருக்கிறார். அதாவது திருமலையில் அத்துமீறி நிர்மாணப்பணிகள் நடப்பது குறித்து சம்பந்தனுடன் கலந்துரையாடுவதற்கு எதற்காக குழு அமைக்கப்பட்டது என்பது குறித்து அவர் சொல்லவில்லை.

அந்தச் செய்தியைப் படித்துவிட்டு லண்டனிலிருந்து பேசிய நண்பர் ஒருவர், பழைய சம்பவம் ஒன்றை ஞாபகப் படுத்தினார்.

சம்பந்தன் ஐயா, கடைசியாக நடந்த தேர்தலில் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னதாகவும் திருகோணலையில் மக்களால் தெரிவுசெய்யப்பட்டு மக்கள் பிரதிநிதியாக இருந்தவர். அதுவும் நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் அவர் எதிர்க் கட்சித் தலைவராக இருந்தவர். அப்போது, திருகோணமலையில் கன்னியா வெந்நீரூற்று பகுதியில் இந்து ஆலயத்தை புனரமைப்புச் செய்வதற்கு தொல்பொருள் திணைக்களம் முட்டுக்கட்டை போட்டபோது, அங்கு தமிழ் மக்கள் பாரிய ஆர்ப்பாட்டங்கள்- போராட்டங்கள் என்று நடத்திக் கொண்டிருந்தனர். பல தடவைகள் அப்போது பொலிஸாருடனும் முறுகல் நிலை ஏற்பட்டது. அந்தவேளையில் சம்பந்தன் ஐயாவிடம் சென்ற அவரின் வாக்களார்கள், அதுகுறித்து அவரிடம் புகார் பட்டியல் வாசித்தபோது, அவர் சொன்னது பலருக்கும் மறந்துபோயிருக்கலாம். ஆனால், அவர் அப்போது சொன்னது, எல்லாம் நமக்கான அரசியல் தீர்வு கிடைக்கும்போது பார்த்துக்கொள்ளலாம் என்று. அவர் சொல்ல வந்தது, நமக்கு அதிகாரங்கள் கிடைக்கின்றபோது அவற்றை தடுக்கலாம்தானே என்பது. அவர் இவ்வாறு பதிலளித்திருந்தபோதிலும், அவரை அடுத்த தேர்தலிலும் தெரிவுசெய்தவர்கள் திருகோணமலை மக்களே. அப்படியிருக்கையில் அவர் இப்போது செயல்படமுடியாதவராக இருக்கிறார் என்பதற்காக அவர்மீது எதற்காக புகார் பட்டியல் வழங்கினார்கள்? இதுகுறித்து எதற்காக அவருடன் கதைப்பதற்குக் குழு அமைத்தார்கள் என்பதையும் விளக்கியிருக்க வேண்டாமா?

இப்படிக்கேட்ட அந்த லண்டன் நண்பர்,

திருகோணமலையிலிருந்து தமிழ் அரசுக் கட்சியின் மத்தியகுழுக்கூட்டத்தில் கலந்துகொண்டு, திருகோணமலையில் நடக்கும் தமிழர் விரோத சம்பவங்களை புகார் பட்டியலாக வழங்கிய சிவில் சமூக பிரதிநிதிகளே சம்பந்தனிடம் நேரில் சென்று கேட்டிருக்கலாம். ஆகக் குறைந்தது, அப்படியொரு புகார் வழங்கியவர்களை அழைத்துக்கொண்டு தமிழ் அரசுத் தலைவர்கள் நேரே கொழும்பு போயிருக்கலாமே என்று கேட்டதிலும் நியாயம் இல்லாமல் இல்லை.

அந்த நண்பர் தனது தொலைபேசி உரையாடலை முடிக்கின்றபோது கேட்டார், திருகோணமலை திருக்கோணேஸ்வரர் ஆலய சூழலில் இடம்பெற்று வருகின்ற அத்துமீறிய நிர்மாணப் பணிகள் தொடர்பில் சம்பந்தனுடன் கலந்துரையாடி தீர்வுகாணமுடியும் என்றால், அவரோடு கலந்துரையாடி குருந்தூர்மலை விவகாரத்துக்கும் ஒரு தீர்வைப் பெற்றுக்கொடுத்தால் நல்லதுதானே? என்று.

அல்லது சம்பந்தன் செயல்பட முடியாதவராக இருப்பதால், செயல்படக்கூடிய - அவருக்கு அடுத்த நிலையில் இருக்கின்ற குகதாசனை எம். பி. ஆக்கினால், அவரால் கோணேஸ்வரர் பிரச்னைக்கு தீர்வு காண முடியுமென்றால் அவரால் குருந்தூர்மலைக்கும் தீர்வுகாண முடியாதா என்ன?

எதுவோ, அந்தக் குழு சம்பந்தன் ஐயாவை சந்தித்து கலந்துரையாடிய பின்னர் என்ன நடக்கின்றது என்று பொறுத்திருந்து பார்ப்போம்.!

- ஊர்க்குருவி

# இந்திய இராணுவம் இலங்கையில் புரிந்த முறைகேடுகள் விசாரிக்கப்படவேண்டும்

## மீனாக்ஷி கங்குலி வலியுறுத்தல்

கொழும்பு, செப். 24

இலங்கையில் இந்திய இராணுவத்தை நிலைநிறுத்திய போது இடம்பெற்ற குற்றங்கள் தொடர்பிலும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை முன்வைத்துள்ள பொறிமுறைகள் மூலம் உரிய விசாரணை நடத்தப்படவேண்டும் என நான்கு சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகள் கோரியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தெற்காசியப் பணிப்பாளர் மீனாக்ஷி கங்குலியை மேற்கோள் காட்டி கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மோதலின்போது இடம்பெற்ற சம்பவங்கள் உள்ளிட்ட அனைத்து சர்வதேச குற்றங்களுக்கும் தீர்வு காண இலங்கை மீது வலுவான தீர்மானத்தை கோருவதாக மீனாக்ஷி கங்குலி தெரிவித்ததாக அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் இந்திய படையினர் போர் நிறுத்த உடன்படிக்கையை அமுல்படுத்துவதற்காக அனுப்பப்பட்டிருந்தபோது இடம்பெற்ற முறைகேடுகள் முறையாக விசாரிக்கப்பட்டு, பொறுப்புக்கூறல் நடைமுறைப் படுத்தப்படவேண்டும் என மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தெற்காசியப் பணிப்பாளர் மீனாக்ஷி கங்குலி வலியுறுத்தியுள்ளார்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 1987 ஜூலை முதல் 1990 மார்ச் வரையான காலப்பகுதியில் இந்திய இராணுவம் அட்டூழியங்களில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டால், இந்தியாவின் பொறுப்புக்கூறல் எவ்வாறு அமையும் என முன்வைக்கப்பட்ட கேள்விக்கு பதிலளித்தபோதே மீனாக்ஷி கங்குலி இந்த கருத்துகளை வெளியிட்டுள்ளார்.

சர்வதேச மன்னிப்புச் சபை, யு.என். அட்வொகேசி, போரம் - ஏசியா, மனித உரிமைகள் கண்காணிப்பகம் சார்பில் அவர் இதனை தெரிவித்தார். (அ)

# குருதிக்கொடை முகாம்

யாழ்ப்பாணம், செப். 24

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினரின் ஏற்பாட்டில் “ஒரு துளி உயிர் தரும்” - குருதிக்கொடை முகாம் இன்று சனிக்கிழமை காலை 9.00 மணிமுதல் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

வருடாந்தம் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சமூகத்தினரால் மேற்கொள்ளப்படும், இந்த குருதிக்கொடை முகாமில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (ஐ)

# கிளைபோசேட் இறக்குமதிக்கு அரசு அனுமதி

கொழும்பு, செப். 24

கிளைபோசேட் களைக் கொல்லி இறக்குமதி மீதான கட்டுப்பாடுகளை தளர்த்த அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதன்படி, முழுமையான கண்காணிப்பின் கீழ் கிளைபோசேட் இறக்குமதி அனுமதிக்கப்படும்.

விவசாயிகளிடமிருந்து கிடைக்கப்பெற்ற பல முறைப்பாடுகளை கருத்திற்கொண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, தேயிலை பயிர்ச்செய்கைக்கு மட்டுமே கிளைபோசேட் இறக்குமதிக்கு அரசு அனுமதி அளித்திருந்தது. (அ)

# 5 ஆயிரம் புற்றுநோயாளர்கள் வருடாந்தம் மரணிக்கும் நிலை!

## சஜித் பிரேமதாஸ சபையில் சுட்டிக்காட்டு

கொழும்பு, செப். 24

தரமான மருத்துவ மற்றும் கதிர்வீச்சு உபகரணங்கள் பற்றாக்குறையால் காப்பற்றாக் கூடிய புற்றுநோயாளர்களில் ஐயாயிரத்திற்கும் அதிகமானோர் வருடாந்தம் உயிரிழக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் வியாழக்கிழமை நிலையியற் கட்டளை 27/2 இன் கீழ் சுகாதார அமைச்சிடம் கேள்வியெழுப்பி உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சிறப்பான சுகாதார சேவையை வழங்குவது அரசாங்கத்தின் பொறுப்பாகும். ஆனால் சுகாதாரத்துறைக்குப் போதுமான மருத்துவ உபகரணங்களை அரசாங்கத்தினால் விநியோகிக்க முடியாதுள்ளது.

அத்துடன் புற்றுநோயாளர்களுக்கு தேவையான கதிர்வீச்சு உபகரணங்களுக்கான பற்றாக்குறை மற்றும் பராமரிப்பு தொடர்பான பிரச்னைகளால் அந்த நோயாளர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது.

அதுமட்டுமன்றி அரச சுகாதாரத்துறையில் ஆளணி முகாமைத்துவமும் பிரச்சினைகளுக்கு உள்ளாகியுள்ளது. இதன்படி சில விடயங்களுக்கு அரசாங்கத்திடம் இருந்து பதில்களை எதிர்பார்க்கின்றேன்.

புற்றுநோய்க்காக பயன்படுத்தும் எலக்டா கம்பக்ட், எலக்டா செலர்ஜிக் பிளட்போர்ம், எலக்டா செலர்ஜி கதிர்வீச்சு உபகரணங்களை சுகாதார அமைச்சுக்கு பெற்றுக் கொள்வதற்காக 2013 ஆம் ஆண்டில் வெளிநாட்டு நிறுவனமொன்றுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டதா? அந்த ஒப்பந்தத்தை சபையில் முன்வைக்க முடியுமா? அந்த உடன்படிக்கை தொடர்பான பிரச்னைகளை தீர்ப்பதற்காக விநியோக தரப்பினருடன் இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளனர். எதிர்காலத்தில் குறைந்த விலையில் அந்த உபகரணங்களை வழங்குவதற்கு இணக்கம் வெளியிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் தவறான உபகரணங்களை கொண்டு வந்து மோசடிகளை செய்து, தவறுகளை சரி செய்வதற்காக புதிதாக அந்த நிறுவனத்திடம் நஷ்ட ஈடாக மறுசீரமைப்பு உத்தரவாதத்தை பெற்றுள்ளனர். அந்தளவுக்கு ஊழல் நடந்துள்ளது. ஊழலைச் சீர்செய்ய எடுத்த நடவடிக்கை இப்போது செயற்படுத்தப்படுகின்றதா?

தரமான உபகரணங்கள் இல்லாமையினாலும் போதுமான கதிர்வீச்சு உபகரணங்கள் இல்லாமையினாலும் வருடாந்தம் காப்பற்றாக்கூடிய ஐயாயிரத்திற்கும் அதிகமான புற்றுநோயாளர்கள் உயிரிழக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது என்பதனை அரசாங்கம் அறிந்துள்ளதா? அப்படியாயின் புதிய உபகரணங்களைக் கொள்வனவு செய்யவும், அதற்கான கட்டடத்திற்கும் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்படுமா?-என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu
24.09.2022 சனிக்கிழமை
பிலவ வருடம், புரட்டாதி 07

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம் உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
**தொலைபேசி : 021 730 1370**

# இன்னும் எத்தனை வருடங்கள் செல்லவேண்டும்?

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது, கூட்டத் தொடர் நடைபெற்று வருகின்றது. இதன்போது உரையாற்றிய, ஊடக வியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் மனைவி சந்தியா, தனது உரையில் கேள்வியொன்றை முன்வைத்திருக்கின்றார். அதாவது, இன்னும் எத்தனை வருடங்களுக்கு ஜெனிவாவுக்கு வர நேரிடுமென்று கேள்வியெழுப்பியிருக்கின்றார். பிரகீத் எக்னெலிகொட 2010, ஜனவரியில், கொழும்பில் வைத்து காணாமல் ஆக்கப்பட்டிருந்தார். தனது கணவனுக்கான நீதியைக் கோரி, எக்னெலிகொடவின் மனைவி தவறாமல் ஜெனிவாவுக்கு சென்று வருகின்றார். இதேபோன்றுதான், தமிழர் தாயகத்திலிருந்தும் பலர் வருடங்கள்தோறும் சென்றுவருகின்றனர். ஆனால், இன்னும் எத்தனை வருடங்களுக்கு அங்கு செல்ல நேரிடும்? அப்படி சென்றாலும் நீதி கிடைக்குமா?

51ஆவது கூட்டத் தொடரில் முன்வைக்கப்பட்டிருக்கும் இலங்கை மீதான பிரேரணை தமிழ் மக்களுக்கு மீண்டும் ஏமாற்றத்தை வழங்கியிருக்கின்றது. எதிர்பார்த்த மாற்றங்கள் உள்வாங்கப்படவில்லை. ஆனால் மறுபுறம், அழுத்தங்களுக்கு மத்தியிலும் இலங்கை அரச கட்டமைப்புக்கள் அதன் திட்டமிட்ட ஆக்கிரமிப்பு செயல்பாடுகளை நிறுத்தவில்லை. நபர்கள், அமைச்சுக்கள் மாறினாலும், இலங்கையின் அரச இயந்திரங்களின் கட்டமைப்பிலும் அவற்றின் செயல்பாடுகளிலும் எவ்வித மாற்றங்களும் ஏற்படவில்லை.

ஜெனிவா கூட்டத்தொடர் இடம்பெற்றுக் கொண்டிருக்கும்போதே, திருகோணமலை திருக்கோணேஸ்வரர் ஆலய வளாகத்திற்குள் தொல்பொருள் திணைக்களம் ஆக்கிரமிப்பு முயற்சிகளை மேற்கொள்கின்றது. இந்த விடயம் பேசுபொருளாக இருக்கின்றபோதே, திருகோணமலை நகர சபையின் நிர்வாக எல்லைக்குள் அமைந்திருக்கும் மெக்கெய்ஸர் விளையாட்டுத் திடலில் தொல்பொருள் ஆய்வு என்னும் அடிப்படையில் அகழ்வுகளில் ஈடுபட்டு வருகின்றனர். இதுதொடர்பில் நகர சபை கேள்வியெழுப்பியபோது, கோணேசர் ஆலயம் அமைந்துள்ள கோட்டை பகுதியிலிருந்து 400 மீற்றர் வரையான நிலப்பகுதியானது தொல்பொருள் ஆய்வுகளுக்குரிய இடமென்று பதிலளிக்கப்பட்டிருக்கின்றது. இதேவேளை, நீதிமன்ற உத்தரவையும் மீறி குருந்தூர் மலையில் பௌத்த விகாரை கட்டும் முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

பௌத்த விகாரைகளை நிர்மாணிப்பது விடயமல்ல. ஆனால், தமிழர் நிலங்களை ஆக்கிரமிக்கும் நோக்கில் இவ்வாறான முயற்சிகளை முன்னெடுப்பதுதான் சிக்கலானது. ஆனால், இங்கு கேள்வி - ஜெனிவா கூட்டத் தொடர் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதே இவ்வாறான விடயங்களை எவ்வாறு துணிவாக முன்னெடுக்க முடிகின்றது? அவ்வாறாயின் ஜெனிவா அழுத்தங்களை ஒரு பொருட்டாக சிங்கள ஆட்சியாளர்கள் கருதவில்லையா? அவர்கள் இதனை ஒரு பொருட்டாக கருதவில்லையாயின், மென்மையான அழுத்தங்களை வழங்கிக் கொண்டிருப்பதால் என்ன பயன்? ஒன்றில் அழுத்தங்களை அதிகரிக்க வேண்டும் அல்லது, நாடுகள் சில இறுக்கமான தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும். ஆனால், தமிழ் மக்களுக்காக அவ்வாறான தீர்மானங்களை எவருமே முன்னெடுக்கப் போவதில்லை. இந்த நிலையில், இருக்கின்ற அதிகாரங்களை தமிழ் தரப்புக்கள் உச்சளவில் பயன்படுத்த வேண்டும். மாகாண சபை தேர்தல்களை நடத்துமாறு தமிழ்த் தேசியக் கட்சிகள் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும். ஆனால், தமிழ்க் கட்சிகள் செய்து கொண்டிருப்பதோ வேறு.

இந்த நிலையில் பிரதீப் எக்னெலிகொடவின் மனைவியின் கேள்வி, வெறும் ஒரு தனி மனிதரின் கேள்வியல்ல. மாறாக, ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் அடிப்படைகள் தொடர்பான கேள்வி. அதன் கட்டமைப்புசார் பலவீனங்கள் தொடர்பான கேள்வி. பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதியை வழங்குவதில், உலக கட்டமைப்புக்களின் இயலாமை தொடர்பான கேள்வி. இவ்வாறான கேள்விகளுடன் இன்னும் எத்தனை காலத்துக்கு தமிழினம் அலையப் போகின்றது? இந்தக் காலத்தில் நீதியை கோரிவரும் பலர் இயற்கையாகவே இவ்வுலக வாழ்வை துறந்திருப்பர்.

# தொல்பொருள் என்ற பெயரில் திருக்கோணேஸ்வரம் சூறை!

## *சபையில் கோவிந்தன் கருணாகரம் குற்றச்சாட்டு*

*கொழும்பு, செப். 24*

*தொல்பொருள் என்னும் பெயரிலே தமிழரின் வரலாற்றுப் பெருமை கொண்ட திருக்கோணேஸ்வரம் சூரையாடப்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த நாட்டிலே வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்ட தொல்பொருள் திணைக்களம் திருக்கோணேஸ்வரத்தில் மாத்திரம் தொல்பொருள் என்கின்ற போர்வையில் குடியேற்றத்திற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் (ஜனா) தெரிவித்தார்.*

*பாராளுமன்றத்தில் இடம்பெற்ற திருகோணமலை திருக்கோணேஸ்வரர் ஆலய விடயம் தொடர்பிலான ஒத்திவைப்புப் பிரேரணை மீததான விவாதத்தின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.*

*அவர் மேலும் தெரிவிக்கையில்-*

*தொல்பொருள் என்னும் பெயரிலே தமிழரின் வரலாற்றுப் பெருமை கொண்ட திருக்கோணேஸ்வரம் சூறையாடப்பட்டுக் கொண்டிருக்கின்றது. கோணேஸ்வரர் ஆலயத்தின் புகழை வரலாற்றுக்கு முந்தைய காலத்தில் இருந்தே பல புராணங்கள் போற்றியுள்ளன. இதற்கு சிறந்த உதாரணம் தட்சண கைலாய புராணமாகும். இலங்காபுரியை ஆண்ட இராவணனால் வழிபட்ட இவ்வாலயத்தின் பெருமையை திருஞானசம்பந்தர் பதிகம் மூலம் பாடியுள்ளார். பல்லவ, சோழர் கால கல்வெட்டுக்கள் பலவற்றில் இதன் பெருமை எடுத்துக் கூறப்பட்டுள்ளது.*

*1624ஆம் ஆண்டு போர்த்துக்கேயர் திருகோணமலையிலே ஆட்சி செய்த காலம் இந்தக் கோயிலை உடைத்து அதன் செல்வங்களை அள்ளிச் சென்றது மாத்திரமல்லாமல், அந்தக் கோயிலை உடைத்த கற்களைக் கொண்டுதான் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர கூறிய பிரட்றிக் கோட்டை என்பது உருவாக்கப்பட்டது. ஆனால் அந்தப் பாராளுமன்ற உறுப்பினர் 1952 இல் மூன்று மதஸ்தலங்களிலே அதுவும் ஒன்று என்று கூறுகின்றார்.*

*ஐம்பது வருடங்களுக்கு மேலாக திருக்கோணேஸ்வரத்தைப் புனித நகராக மாற்ற வேண்டும் என்று இந்துக்கள் படாதபாடு பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். 1965 இல் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி ஒரு நல்லிணக்கத்தை இந்த நாட்டு அரசுடன் ஏற்படுத்த வேண்டும். இலங்கையில் தமிழர்களின் இனப்பிரச்னைக்கு நிரந்தரமான தீர்வைக் காணவேண்டும் என ஆட்சி அதிகாரத்தில் பங்குகொண்டிருந்தார்கள். திருச்செல்வம் உள்ளூராட்சி அமைச்சராக இருந்தார். அவர் திருகோணமலை நகரைப் புனித பூமியாக மாற்ற வேண்டும் என்ற பிரேரணை கொண்டு வந்திருந்தார். டட்லி சேனநாயக்காவும் அதற்கு அனுசரணை கொடுத்திருந்தார். ஆனால் விகாராதிபதிகளின் எதிர்ப்பைத் தாங்க முடியாமல் திருச்செல்வத்திற்கே தெரியாமல் அந்த ஆணைக் குழுவை நிராகரித்தமையால் திருச்செல்வம் அவர்கள் அமைச்சரவையை விட்டு வெளியேற வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது.*


*இருந்தாலும் 2018ஆம் ஆண்டு திருகோணமலை மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் அரச அதிபர் அங்குள்ள நான்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்னலையில் முடிவு எட்டப்படடது. அங்கு கடைகள் வைத்திருந்த 45 பேரும் அமைச்சர் சொல்வது போன்று அந்தக் கோயிலையோ, அப்பிரதேசத்தையோ சுற்றியிருந்தவர்கள் அல்லர். அன்று இரத்தினபுரியிலே இருந்து திருகோணமலைக்கு வந்து பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட புஞ்சிநிலமே தன்னுடைய பிரதேசத்தில் இருந்தும், தம்புள்ளை, குருநாகல், பொலநறுவை போன்ற பிரதேசங்களில் இருந்தும் தேர்தல் அடாவடி வேலைகளுக்காகக் கொண்டு வரப்பட்டவர்கள் தான் அங்கு குடியேற்றப்பட்டார்கள். அவர்களின் வாழ் வாழ்வாதாரத்திற்காக அந்தக் கோயில் பிரதேசத்தில் தற்காலிகக் கடைகள் அமைத்துக் கொடுக்கப்பட்டன.*

*அந்தக் கோயில் நிர்வாகம் மனச்சாட்சியுடன் நடந்து கொள்கின்றார்கள். என்னவென்றால் 2018ஆம் ஆண்டு மாவட்ட அபிவிருத்திக் குழுவில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைவாக அவர்களை அங்கு தங்க வைப்பதற்கு எவ்வித ஆட்சேபனைகளும் இல்லை என அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். ஆனால், தொல்பொருள் திணைக்களம் என்பது இந்த நாட்டில் வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்டது. ஆனால், அவ்விடத்தில் வேற்று மதத்தவர்களை, இனத்தவர்களை அந்தக் கோயிலையே வழிபடாதவர்களைக் கொண்டு வந்து தொல்பொருள் திணைக்களம் என்கின்ற போர்வையில் குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.*

*இன்று திருகோணமலை திருக்கோணேஸ்வரத்தில் சிங்களம் மட்டும் பேசக் கூடிய பல்கலைக்கழக மாணவர்களினாலேயே அந்தப் பிரதேசத்தில் தொல்பொருள் ஆராய்ச்சி நடக்கின்றது. ஏன் இந்த நாட்டிலே தொல்பொருளுடன் தொடர்புடைய ஏனைய மதத்தவர்கள் இல்லையா? கிழக்கு மாகாணத்திற்கென நூறு வீதம் சிங்களவர்களினால் மாத்திரம் உருவாக்கப்பட்ட செயலணியும், தொல்பொருள் சம்பந்தமாக ஆராய்ச்சி செய்யும் பல்கலைக்கழக மாணவர்களும் எதனைச் செய்ய முனைகின்றார்கள்?*

*முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகரவிற்கு ஒன்றைக் கூறிக் கொள்ள விரும்புகின்றேன். இந்த நாட்டிலே நாங்கள் நல்லிணக்கத்தை விரும்புகின்றோம். நீங்கள் கூறுவது போன்று நீங்கள் தமிழருக்கு இரத்தம் கொடுத்திருக்கலாம், நீங்கள் குறிப்பிட்ட தமிழர்களுடன் சேர்ந்து வாழ்ந்திருக்கலாம். ஆனால், கடந்த அமைச்சரவையிலே இருந்த இனவாதிகளுள் முக்கியமான இனவாதி நீங்களாகவே இருப்பீர்கள்-என்றார்.* *(அ-06)*

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



செப்ரெம்பர் - 24 சனிக்கிழமை
சுபகிருது வருடம் - புரட்டாதி 06
நல்ல நேரம் : 07.30 - 09.00
ராகு காலம் : 09.00 - 10.30
திதி : சதுர்த்தசி




**மேடம்**
முயற்சியை நிறைவேற்றுவதில் அக்கறை காட்டுவீர்கள். எதிர்பார்ப்பு நிறைவேறும். தள்ளிப்போன முயற்சி இன்று நிறைவேறும். நினைத்ததை சாதிப்பீர்கள். மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**இடபம்**
எதிர்பார்ப்பு நிறைவேறும். திட்டமிட்டு செயல்பட்டு முயற்சியில் லாபம் காண்பீர்கள். மகிழ்ச்சி அதிகரிக்கும். வருமானத்தில் இருந்த தடை விலகும்.கடன்களை அடைத்து மகிழ்வீர்கள்.

**மிதுனம்**
துணிச்சலுடன் செயல்படுவீர்கள். எதிர்பார்த்த தகவல் வந்து சேரும். வழக்கு உங்களுக்கு சாதகமாகும்.நண்பர் உதவியுடன் விருப்பம் நிறைவேறும். செயல்கள் லாபமாகும்.

**கடகம்**
பிள்ளைகளின் தேவையை நிறைவேற்றுவீர்கள். எண்ணங்கள் நிறைவேறும் நாள். குடும்பத்தினரால் உங்கள் செயல் வெற்றியாகும். எதிர்பார்த்த பணம் வந்து சேரும். உங்கள் செல்வாக்கு அதிகரிக்கும்.

**சிம்மம்**
குடும்பத்தில் ஏற்பட்ட பிரச்னை விலகும். பெரியோரின் ஆலோசனை நன்மை தரும். முயற்சி இழுபறியாகும். குழப்பம் வந்து நீங்கும். செலவுகள் அதிகரிக்கும். புதிய முயற்சியை தவிர்ப்பது நல்லது.

**கன்னி**
திடீர் செலவு தோன்றும். புதிய இடம் வாங்கும் எண்ணம் நிறைவேறும். குடும்பத்தினர் விருப்பத்தை நிறைவேற்ற செலவுகள் செய்வீர்கள்.இழுபறியாக இருந்து வந்த வழக்கில் சாதகமான நிலை உண்டாகும்.

**துலாம்**
உற்சாகத்துடன் செயல்படுவீர்கள். நீண்ட நாள் எண்ணம் நிறைவேறும். எதிர்பார்த்த செய்தி வந்து சேரும். வெளியூர் பயணம் நன்மை தரும். பணநெருக்கடி விலகும். நண்பரின் உதவியால் லாபம் கிடைக்கும்.

**விருட்சிகம்**
குடும்பத்தினர் வழி காட்டுவர். போட்டிகளை சமாளித்து வியாபாரத்தை விரிவு செய்வீர்கள். வருவாய் அதிகரிக்கும். எதிரிகள் ஆச்சரியப்படும் வகையில் புதிய மாற்றத்தை உண்டாக்குவீர்கள்.

**தனுசு**
மனம் மகிழும் நிலை ஏற்படும்.அலைச்சல் அதிகரித்தாலும் விருப்பம் நிறைவேறும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். சொத்து வாங்கும் முயற்சியில் ஈடுபடுவீர்கள். எண்ணம் நிறைவேறும்.

**மகரம்**
எதிர்பாராத தடைகளை சந்திப்பீர்கள். அலைச்சல் அதிகரிக்கும். வியாபாரத்தில் புதிய முயற்சி வேண்டாம். பணவரவில் தடை ஏற்படும்.கொடுக்கல் வாங்கலில் கவனம் தேவை. எதிரிகளால் சங்கடம் நேரும்.

**கும்பம்**
தம்பதியருக்குள் ஏற்பட்ட சங்கடம் விலகும். மனம் மகிழும் சூழல் உண்டாகும். புதிய நட்பால் வாழ்வில் திருப்புமுனை உண்டாகும். நினைத்ததை சாதிப்பீர்கள். அலுவலகத்தில் செல்வாக்கு அதிகரிக்கும்.

**மீனம்**
திருமண வயதினருக்கு வரன் தேடி வரும். எதிர்பார்த்த வளர்ச்சியை அடைவீர்கள். முயற்சிக்கு குடும்பத்தினர் ஒத்துழைப்பர். உறவினருடன் ஏற்பட்ட சங்கடம் விலகும். எதிர்பார்த்த வரவு வந்து சேரும்.

# அ. தி. மு. க. பொதுச் செயலர் பதவிக்கு ஒக்ரோபரில் தேர்தல்!

சென்னை, செப். 24

அ. தி. மு. க. கட்சியின் தற்காலிக பொதுச் செயலாளராக இருக்கும் எடப்பாடி பழனிசாமி நிரந்தர பொதுச் செயலாளராகும் விதத்தில் தேர்தல் நடத்தப்படவுள்ளது.

அ. தி. மு. கவில் ஒற்றைத் தலைமை பிரச்னையில் எடப்பாடி பழனிசாமிக்கும், ஓ. பன்னீர்செல்வத்துக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் எடப்பாடி பழனிசாமி தரப்பின் கை ஓங்கியது. பொதுக்குழு உறுப்பினர்களில் 95 சதவீதம் பேர் எடப்பாடி பழனிசாமிக்கு ஆதரவாக இருக்கிறார்கள். இதன் அடிப்படையில் கடந்த ஜூலை 11ஆம் திகதி பொதுக்குழு கூட்டம் நடத்தப்பட்டு கட்சியின் இடைக்கால பொதுச் செயலாளராக எடப்பாடி பழனிசாமி தெரிவு செய்யப்பட்டார்.

அன்றைய கூட்டத்திலேயே அடுத்த 3 மாதங்களுக்குள் பொதுச் செயலாளரை தெரிவு செய்வதற்கான தேர்தல் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. தேர்தல் அதிகாரிகளாக முன்னாள் அமைச்சர்கள் பொன்னையன், நத்தம் விசுவநாதன் ஆகியோர் நியமிக்கப்பட்டார்கள். அந்த பொதுக்குழு செல்லாது என்று அறிவிக்கக்கோரி ஓ.பன்னீர்செல்வம் தாக்கல் செய்த மனு தள்ளுபடியானது.

இதே போல் கட்சி அலுவலக சாவியை எடப்பாடி பழனிசாமியிடம் ஒப்படைத்தது செல்லும் என்று உயர்நீதிமன்றம் அறிவித்தது. கட்சியில் உறுப்பினராக இல்லாத ஓ. பன்னீர் செல்வத்தால் உரிமை கோர முடியாது என்றும் அறிவித்தது.

இதன் மூலம் எடப்பாடி பழனிசாமி பொதுச்செயலாளர் தேர்தலை நடத்துவதற்கான தடைகள் விலகியது. இதையடுத்து குறிப்பிட்ட காலத்துக்குள் தேர்தலை நடத்தி முடிக்க எடப்பாடி பழனிசாமி திட்டமிட்டுள்ளார். அடுத்த மாதம் (ஒக்ரோபர்) முதல் வாரம் தேர்தல் நடத்தப்படலாம் என்று கூறப்படுகிறது. அ.தி.மு.க. விதிப்படி கட்சியின் பொதுச் செயலாளரை தொண்டர்கள்தான் தெரிவு செய்ய வேண்டும்.

பொதுச்செயலாளர் தேர்தலில் போட்டியிட 10 மாவட்ட செயலாளர்கள் முன்மொழிய வேண்டும். 10 மாவட்ட செயலாளர்கள் வழிமொழிய வேண்டும். மேலும் 5 வருடம் தலைமை கழக நிர்வாகியாக இருந்திருக்க வேண்டும். 15 வருடமாக கட்சியில் உறுப்பினராக இருக்க வேண்டும். இந்த காரணங்களால் ஓ. பன்னீர்செல்வம் பொதுச் செயலாளர் தேர்தலில் போட்டியிடுவதற்கான வாய்ப்பும் கிடைக்காது என்றே கூறப்படுகிறது.

எனவே திட்டமிட்டபடி தேர்தலை நடத்த முடிவு செய்துள்ளனர். இந்த மாத இறுதிக்குள் தேர்தல் திகதி அறிவிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பொதுச் செயலாளர் பதவிக்கு எடப்பாடி பழனிசாமி போட்டியின்றித் தெரிவு செய்யப்படுவார் என்று கட்சி வட்டாரங்கள் கூறுகின்றன.

பொதுச் செயலாளர் தேர்தல் முடிந்ததும் 15 நாட்களுக்குள் பொதுக்குழுவை கூட்டி அங்கீகாரம் பெறவும் திட்டமிட்டுள்ளார்கள். இது தொடர்பாக மாவட்ட வாரியாக பொதுக் குழு உறுப்பினர்களிடம் ஆதரவு திரட்டும் வேலைகள் தொடங்கியுள்ளன. (ஐ)

# பா. ஜ. கட்சியின் அலுவலகம்மீது பெற்றோல் குண்டுவீசி தாக்குதல்!

கோவை, செப். 24

கோவை பா. ஜ. க. கட்சி அலுவலகம் மீது பெற்றோல் குண்டு வீசப்பட்ட சம்பவம் தொடர்பாக விசாரிக்க 5 தனிப்படைகள் அமைக்கப்பட்டுள்ளன.

கோவை சித்தாபுதூரில் பா. ஜ. க. அலுவலகத்தின் நேற்று முன்தினம் இரவு பெற்றோல் குண்டு வீசப்பட்டது. இரு சக்கர வாகனத்தில் வந்த இருவர் பெற்றோல் குண்டு வீசி விட்டு சென்றதைப் பார்த்த அலுவலகத்தின் முன்பு நின்றிருந்த சிலர், அவர்களை பிடிக்க முற்பட்டும் தப்பிச் சென்றனர்.

இதையறிந்த பா. ஜ. கவினர் கோவை காந்திபுரம் பேருந்து நிலையம் முன்பு திரண்டு சாலையில் அமர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். தகவலறிந்த பொலிஸார் அங்கு விரைந்து பேச்சில் ஈடுபட்டனர். இதையடுத்து அவர்கள் கலைந்து சென்றனர்.

மேலும், பெற்றோல் குண்டுகளை பறிமுதல் செய்தும் அங்குள்ள சி. சி. ரீ. வி. கமெரா காட்சிகளின் அடிப்படையிலும் ஆய்வு மேற் கொண்டு வருகின்றனர். பா. ஜ. கவினர் கொடுத்த முறைப்பாட்டின் அடிப்படையில் இதுகுறித்து விசாரணை மேற்கொள்ள 5 தனிப்படைகள் அமைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் கோவை ஒப்பனகார வீதியிலும் துணிக்கடை ஒன்றில் பெற்றோல் குண்டு வீசப்பட்டது குறிப்பிடத்தக்கது. இரண்டு இடங்களிலும் பெற்றோல் குண்டு வெடிக்காததால் பெரும் விபத்து தவிர்க்கப்பட்டது. (ஐ)

# எங்களின் மன தைரியத்தை யாரும் குறைத்துவிட முடியாது

## அண்ணாமலை



சென்னை, செப். 24

பெற்றோல் குண்டு வீசி எங்கள் சகோதர, சகோதரிகளின் மன தைரியத்தை குறைத்து விடலாம் என்று யாரும் நினைத்து விட வேண்டாம் என தமிழக பா. ஜ. க. தலைவர் அண்ணாமலை கூறியுள்ளார்.

கோவை பா. ஜ. க. அலுவலகம் மீது பெற்றோல் குண்டு வீசப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இது தொடர்பாக விசாரிக்க 5 தனிப்படைகள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் இதுகுறித்து தமிழக பா. ஜ. க. தலைவர் அண்ணாமலை தனது கண்டனத்தைப் பதிவு செய்துள்ளார்.

அவர் தனது ருவிற்றர் பக்கத்தில், “கோயம்புத்தூர் கட்சி அலுவலகத்தின்மீது பெற்றோல் குண்டு வீசி எங்கள் சகோதர, சகோதரிகளின் மன தைரியத்தை குறைத்து விடலாம் என்று யாரும் நினைத்து விட வேண்டாம்.

இது போன்ற அச்சுறுத்தல்கள் சமூக விரோதிகளுக்கு எதிரான எங்கள் சமூக பணியை மேலும்

வேகப்படுத்தும். தமிழகத்தின் சட்டம் ஒழுங்கு சீரழிந்து வருவதை மக்கள் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள் என்பதை தி. மு. க. அரசு உணர வேண்டும்“ என்று பதிவிட்டுள்ளார்.



# 42 கிலோகிராம் கஞ்சா சக்கோட்டையில் மீட்பு!

யாழ்ப்பாணம், செப். 24

யாழ்ப்பாணம், சக்கோட்டைப் பகுதியில் 42 கிலோகிராம் கஞ்சா படையினரால் மீட்கப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை 5:30. மணியளவில் சுற்றுக்காவலில் ஈடுபட்டிருந்த 551 படைப் பிரிவினர் 42 கிலோகிராம் கஞ்சாப் பொதி ஒன்றைக் கைப்பற்றினர்.

நேற்று அதிகாலை சக்கோட்டை கடற்கரையில் படகில் இருந்து கஞ்சாப் பொதியை இறக்கிக்கொண்டிருந்தபோதே சுற்றுக் காவலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த படையினர் கஞ்சா பொதியை கைப்பற்றினர்.

இதேவேளை படையினர் வருவதை அவதானித்த கடத்தல் காரர்கள் ஒரு பொதியை மட்டும் இறக்கிய நிலையில் மீண்டும் படகுடன் கடலுக்குள் தப்பி சென்றுள்ளனர்.

தப்பிச் சென்றவர்களைக் கைது செய்யும் நடவடிக்கை படையினரால் மேற்கொள்ளப்பட்டது.

(அ)

# கோணேஸ்வரம் சென்று நிலைமையை ஆராய்வேன்

## புத்தசாசன அமைச்சர் உறுதி

கொழும்பு, செப். 24

திருக்கோணேஸ்வரம் ஆலயம் தொடர்பான பிரச்னைகளை நேரில் ஆராய அங்கு விரைவில் தனிப்பட்ட விஜயம் மேற்கொண்டு ஆலய நிர்வாகத்தினருடன் கலந்துரையாடவுள்ளதாக புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பி. சிவஞானம் சிறிதரனால் முன்வைக்கப்பட்ட திருக்கோணேஸ்வரம் ஆலய ஆக்கிரமிப்பு தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணைக்குப் பதிலளித்து உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

"வரலாறுகள் தொடர்பில் நான் பேச விரும்பவில்லை. அகழ்வாராய்ச்சிகளில் பௌத்த, இந்து புராதன அடையாளங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இதேவேளை, வரலாற்றை நீங்கள் திரிபுபடுத்தக்கூடாது. தொல்லியல் சட்டங்கள் மாற்றப்படும் வரை அதனைக் கடைப்பிடிப்பதே எமக்குள்ள தெரிவு.

இதேவேளை, நான் திருக்கோணேஸ்வரம் ஆலயம் தொடர்பான பிரச்சினைகளை நேரில் ஆராய அங்கு விரைவில் தனிப்பட்ட விஜயம் மேற்கொண்டு ஆலய நிர்வாகத்தினருடன் கலந்துரையாடவுள்ளேன்" - என்றார்.

இதன்போது குறுக்கிட்ட சிறிதரன் எம்.பி., "நீங்கள் அங்கு வரும்போது ஆலய தரப்பினருடன் நாமும் பங்கேற்க முடியுமா?" - என்று கேட்டார்.

எனினும், இதற்குக் கடும் எதிர்ப்பு வெளியிட்ட சரத் வீரசேகர எம்.பி., திருக்கோணேஸ்வர ஆலய நிர்வாகத்தினரின் விருப்பத்தின்படியே அங்குள்ள கடைகள் சிங்களவர்களுக்கு வழங்கப்படுகின்றன என்று கிழக்கு மாகாண ஆளுநர் உறுதியாகத் தெரிவித்துள்ளார். ஆலய நிர்வாகமே அதனை விரும்பியுள்ள நிலையில் அந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை அனுமதிக்கக் கூடாது. இவர்கள் குழப்பங்களை ஏற்படுத்தவே செய்வார்கள்" - என்றார்.

தனது உரையைத் தொடர்ந்த அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க, "இந்தப் பிரச்னை சிக்கலானது. எனவே, நான் இதனைப் பேசித் தீர்ப்பேன்" - என்றார். (அ)

# இங்கு இராவணனும் இல்லை சிவ வழிபாடும் இல்லையாம்!

## கூறுகிறார் சரத் வீரசேகர எம். பி.

கொழும்பு, செப். 24

**"இலங்கையில் இராவணன் என்ற மன்னனும் இல்லை. சிவ வழிபாடும் கிடையாது" என்று தெரிவித்த முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சரத் வீரசேகர, திருக்கோணேஸ்வரம் ஆலயத்திலுள்ள கடைகளைச் சிங்களவர்களுக்குக் கொடுப்பதற்கு ஆலய பரிபாலன சபையே விரும்பும் நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் மட்டும் எதிர்ப்பது அவர்களின் அரசியல் ஆதாயத்துக்கே எனவும் கூறினார்.**

பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற திருக்கோணேஸ்வரம் ஆலய ஆக்கிரமிப்பு தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

திருக்கோணேஸ்வரம் ஆலயம் தொடர்பில் தவறான வரலாற்றுப் பின்னணி காணப்படுகின்றது. இராணவன் திருக்கோணேஸ்வரம் ஆலயத்தில் வழிபாட்டில் ஈடுபட்டார் என்று குறிப்பிடுகின்றார்கள். ஆனால், இராவணன் என்ற மன்னன் இருந்தாரா, அவர் தமிழரா, சிவ வழிபாட்டில் ஈடுபட்டாரா என்பதற்கு எவ்வித சான்றும், வரலாறும் இல்லை.

திருக்கோணேஸ்வரம் ஆலயம் அமைந்துள்ள பகுதியில் 300 ஏக்கர் நிலப்பரப்பு காணப்படுகின்றது. இதில் 18 ஏக்கர் நிலப்பரப்பு மாத்திரம்



கோயிலுக்குச் சொந்தமானது.

ஆலயத்துக்குச் செல்லும் பாதையில் சுமார் 60 கடைகள் உள்ளன. இந்தக் கடைகளைச் சிங்கவர்கள் வைத்திருப்பதால் கூட்டமைப்பினர் அதற்கு எதிராக இனவாதமாக எதிர்ப்புத் தெரிவிக்கின்றார்கள்.

திருக்கோணேஸ்வரம் ஆலயத்தின் வீதி இருமருங்கில் உள்ள கடைகளைப் புதுப்பிக்க ஆலயத்தின் நிர்வாக சபையினர் விருப்பம் தெரிவித்துள்ளார்கள். கிழக்கு மாகாண ஆளுநர் இனவாதமற்றவர்.

திருக்கோணேஸ்வரம் ஆலயம் தொடர்பில் தவறான வரலாற்றுப் பின்னணியே காணப்படுகின்றது.

திருகோணமலை மாவட்டத்தில் நான்கு தூபிகள் இருந்துள்ளன. அவற்றில் மூன்று தூபிகள் கடலை நோக்கியதாக அமைந்ததால் அது திருக்கோணேஸ்வரம் எனப் பெயர் பெற்றுள்ளது.

அத்துடன் மகாவம்சத்திலும் இவ்விடயம் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே, எமக்கும் வரலாறு தெரியும். நாங்களும் குறிப்பிடுவோம்.

திருக்கோணேஸ்வரம் ஆலயத்தின் தொன்மை பாதுகாக்கப்பட வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்கின்றோம். நாங்கள் பாதுகாக்கின்றோம். அதுபோல் நீங்களும் குருந்தூர்மலையைப் பாதுகாக்கக் கவனம் செலுத்துங்கள். அங்கு தமிழ் அடிப்படைவாதிகளால் தொல்லியல் திணைக்கள அதிகாரிகள் தாக்கப்பட்டுள்ளனர்- என்றார்.

(அ)

# அமைச்சர்களின் வெளிநாட்டு பயணங்களுக்கு கட்டுப்பாடு!

கொழும்பு, செப். 24

அமைச்சரவை அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்களின் வெளிநாட்டு விஜயங்களை அத்தியாவசியப் பணிகளுக்காக மாத்திரம் மட்டுப்படுத்துவதற்கு ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

தற்போது நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியை கருத்திற்கொண்டு அரச செலவினங்களைக் குறைக்கும் நோக்கில் ஜனாதிபதியினால் இந்த யோசனை முன்வைக்கப்பட்டதாக அமைச்சரவை ஊடகப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

(அ)



# தியாகி திலீபனின் நினைவேந்தல் ஊர்திப் பயணம் கிளிநொச்சியில்!

கிளிநொச்சி, செப். 24

முறிகண்டி பிள்ளையார் ஆலய முன்றலை நேற்றுக் காலை வந்தடைந்த தியாகி திலீபன் நினைவேந்தல் ஊர்தி, கிளிநொச்சி மாவட்டத்தின் பல பகுதிகளுக்கும் சென்று, மக்கள் அஞ்சலிக்காக தரிக்கவுள்ளது.

நேற்றுக் காலை 9 மணியளவில் பொது சுடர் ஏற்றப்பட்டு மலர் வணக்கம் இடம்பெற்றது. தொடர்ந்து அக்கராயன் வீதி ஊடாக பயணத்தை ஆரம்பித்தது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில், கிளிநொச்சி மாவட்டத்தின் பல பகுதிகளுக்கும் குறித்த ஊர்தி சென்று அஞ்சலி நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# டலஸ் அணியை விரட்டியடிப்போம்

## மொட்டு கட்சி அறிவிப்பு

கொழும்பு, செப். 24

டலஸ் அழகப்பெரும தலைமையிலான அணி விடுத்துள்ள சவாலை ஏற்றுள்ள ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சி, அடுத்த கட்சி சம்மேளனத்தின்போது பதவிகள் பறிக்கப்படும் எனவும் சூளுரைத்துள்ளது.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பதவியில் இருந்தும், உறுப்புரிமையில் இருந்தும் முடிந்தால் தன்தைன நீக்கி காட்டுமாறு பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் சவால் விடுத்தார். டலஸ் அழகப்பெருமவும் இந்த சவாலை விடுத்திருந்தார்.

மொட்டு கட்சியின் ஊடக சந்திப்பு நேற்று முன்தினம் கட்சி தலைமையகத்தில் நடைபெற்றபோது ,இது தொடர்பில் கேள்வி எழுப்பட்டது. இதற்கு பதிலளித்த பாராளுமன்ற உறுப்பினர் விமலவீர திஸாநாயக்க ,

உடனடியாக நாம் பதவி நீக்கமாட்டோம். அவசரப்படவும் மாட்டோம். சுதந்திரக்கட்சியில் இருந்துகொண்டே மைத்திரியை விமர்சித்தோம். அவர் அவசரப்படவில்லை.

எனினும், அடுத்த கட்சி சம்மேளனத்தின்போது புதிய தவிசாளர் நியமிக்கப்படுவார், அப்பதவியில் இருந்து பீரிஸ் நீக்கப்படுவார்.

தற்போது எமது கட்சி சூறாவளியில் சிக்கியுள்ளது. ஆனால் வீழ்ந்துவிடவில்லை. நிச்சயம் மீண்டெழும்-என்றார். (அ)

# மீண்டும் இலங்கை இருளில் மூழ்கலாம்!

கொழும்பு, செப். 24

ஒக்ரோபர் இறுதிக்குள் இலங்கையில் நிலக்கரி தீர்ந்துவிடும் என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

நிலக்கரியை பெற முடிந்தால், மின் உற்பத்தி நிலையங்களை மூடுவதற்கு நாடு தள்ளப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நிலக்கரி மின் உற்பத்தி நிலையங்கள் மூலம் தற்போது 40 சதவீத மின் தேவை பூர்த்தி செய்யப்படுகிறது.

நிலக்கரி மின் உற்பத்தி நிலையங்கள் இல்லாவிட்டால், இலங்கையர்கள் நாளாந்தம் 10 முதல் 12 மணித்தியாலங்கள் மின்வெட்டுகளைச் சந்திக்க நேரிடும்-என்றார்.

இலங்கை மின்சார சபை தற்போது தினமும் இரண்டு மணித்தியாலங்களும் 20 நிமிடங்களும் மின்வெட்டுகளை அமுல்படுத்துகின்றது.

மின்வெட்டு காலத்தை இரண்டு மணித்தியாலங்கள் 20 நிமிடங்களாக அதிகரிக்குமாறு இலங்கை மின்சார சபை விடுத்த கோரிக்கைக்கு அங்கீகாரம் வழங்குவதற்கு தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (அ)

# கே.பி. வசமிருந்த புலிகளின் கப்பல்கள், தங்கம் எங்கே?

## தேசிய மக்கள் சக்தி கேள்வி

கொழும்பு, செப். 24

**தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் சர்வதேச பொறுப்பாளரான கே.பியின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த கப்பல்கள், நிதி மற்றும் தங்கம் என்பவற்றுக்கு என்ன நடந்தது - என்று தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக்குழு உறுப்பினரும், அகில இலங்கை விவசாய சம்மேளனத்தின் தலைவருமான நாமல் கருணாரத்ன கேள்வி எழுப்பியுள்ளார்.**



கொத்மலை தேர்தல் தொகுதியில், தேசிய மக்கள் சக்திக்கான தொகுதி சபை அமைக்கும் நிகழ்வு கொத்மலை பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:

அர்ஜுன மகேந்திரன் என்பவர், சாதாரண அரச அதிகாரி. அவர் நாட்டை விட்டு தப்பியோடினார்.

கே.பி. எனப்படும் குமரன் பத்மநாதன், புலிகள் அமைப்பில் பலம்பொருந்திய தலைவராக இருந்தார். பிரபாகரனுக்கு அடுத்தப்படியாக அவரே தலைவர்.

இப்படிபட்ட கே.பி. உலக நாடுகளை சுற்றி வலம் வருகையில் கைது செய்யப்பட்டு, நாட்டுக்கு அழைத்துவரப்பட்டார். கே.பியை இவ்வாறு அழைத்துவர முடியுமென்றால், அரஜுன் மகேந்திரனை ஏன் கைது செய்ய முடியாமல் உள்ளது? மகேந்திரன், ரணிலின் நண்பர் என்பதை தெரிந்துகொள்ளவேண்டும்.

அதேபோல கே.பியின் கட்டளையை ஏற்று செயற்பட்ட இளைஞர்கள் சிறைகளில் உள்ளனர். கேபியோ வெளியில் சுகபோகம் அனுபவிக்கின்றார்.

கே.பியின் கட்டுப்பாட்டின்கீழ் இருந்த கப்பல்கள், பணம், தங்கத்துக்கு என்ன நடந்தது, மர்மமாகவே உள்ளது. எமது ஆட்சியில் இவை குறித்து விசாரணை நடத்தப்படும்.

அதேவேளை, உணவுப் பொருட்களின் விலைகள் தொடர்ச்சியாக அதிகரிக்கையில், விவசாயிகளிடமிருந்து குறைந்த விலைக்கே நெல் கொள்வனவு செய்யப்படுகின்றது. இவ்வாறு குறைந்த விலையில் நெல்லை வாங்கிவிட்டு, அதிக விலைக்கு அரிசி விற்கப்படுகின்றது-என்றார். (அ)

# மலேசியாவில் 10,000 வேலைவாய்ப்பு ஒப்பந்தம் ஒக்ரோபரில் கைச்சாத்து!

கொழும்பு, செப். 24



மலேசியாவில் இலங்கையருக்கு 10,000 வேலைவாய்ப்புகளை வழங்குவதற்கான ஒப்பந்தம் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் கைச்சாத்திடப்படவுள்ளதாக அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

இதற்கென மலேசிய மனித வள அமைச்சர் எம்.சரவணன் மற்றும் மலேசிய தொழிலாளர் நடவடிக்கைகள் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட ராஜதந்திரிகள் ஒக்ரோபர் மாதத்தில் இலங் கைக்கு வருகை தரவுள்ளதோடு, பத்தாயிரம் வேலை வாய்ப்புகளுக்கான துறைகள், ஒப்பந்த கால எல்லை, சம்பளம் உள்ளிட்ட விதிமுறைகள் குறித்தும் தீர்மானிக்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இந்த வேலை வாய்ப்பு சந்தர்ப்பங்களை இலங்கையர்களுக்கு பெற்றுக்கொடுப்பது தொடர்பான ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவது தொடர்பாக தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார, நாட்டிலுள்ள மலேசிய தூதுவர் டான் யேங் தாய்யுடன் கடந்த 22 ஆம் திகதி தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சின் நடைபெற்ற சந்திப்பில் நீண்ட நேரம் கலந்துரையாடினார்.

அமைச்சர் மலேசிய அரசிடம் கடந்த ஜூன் மாதம் 23ஆம் திகதி சம்பளம், ஒப்பந்த காலஎல்லை, விதிமுறைகள் குறித்தும் தீர்மானிக்கப்படும் விடுத்த வேண்டுகோளுக்கு பதிலளிக்கும் முகமாகவே பத்தாயிரம் வேலை வாய்ப்புகளை இலங்கையர்களுக்கு பெற்றுக்கொடுப்பதாக தூதுவர் உத்தி யோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

இவ்வளவு காலமும் மலேசிய நாட்டின் வேலை வாய்ப்பு சந்தர்ப்பங்கள் பங்களாதேஷ், இந்தியா போன்ற நாடுகளுக்கே கிடைத்து வந்திருந்தாலும் நான் கடந்த ஜூன் 23ஆம் திகதி எழுத்து மூலம் வேண்டுகோள் விடுத்ததற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்ததற்கு தூதுவருக்கு நன்றி தெரிவிக்கின்றேன் என அமைச்சர் கூறினார். (அ)

# பகிடிவதையில் ஈடுபடும் மாணவர்கள் கறுப்பு பட்டியலில் இணைக்கப்படுவர்!

## இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன்

கொழும்பு, செப். 24

அரச பல்கலைக்கழகங்களில் புதிய மாணவர்களைப் பகிடிவதை, சித்திரவதை செய்தது நிரூபிக்கப்பட்ட மாணவர்கள் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்படுவார்கள் என உயர்கல்வித்துறை இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இதன்படி, குற்றவாளிகளை வகுப்புகளில் இருந்து தடை செய்யவும், அவர்களின் பட்டங்களை ரத்து செய்யவும், உள்ளூர் பல்கலைக்கழகத்தில் படிக்க அனுமதிக்காமல் இருக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும், அரசில் பணியாற்ற முடியாத வகையில் அவர்களை



கறுப்புப் பட்டியலில் சேர்க்க சட்டத்தரணிகளின் உதவியைப் பெறுவோம்.

பல்கலைக்கழகங்களில் புதிய மாணவர்களை சித்திரவதை செய்வது முற்றாக ஒழிக்கப்பட வேண்டும். அதில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க தற்போதைய சட்டங்களே போதுமானவை.

பல்கலைக்கழகங்களில் இவ்வாறான நிகழ்வுகளை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு எதிராக தரம் பாராமல் நடவடிக்கை எடுக்கப்படும். ஊடகங்களுக்கு பல்கலைக் கழகங்கள் திறந்திருக்கவேண்டும்.

பேராதனை பல்கலைக்கழகத்தின் புதிய மாணவர்களை சித்திரவதைக்கு உட்படுத்திய மாணவர்களுக்கான சட்டம் அமுல்படுத்தப்பட்டு வருகிறது.

பல்கலைக்கழகத்தின் சிற்றுண்டிச்சாலை ஒன்றில் உணவருந்திக் கொண்டிருந்த 11 மாணவர்களை தாக்கியமைக்காக கலைப் பீட மாணவர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்-என்றார். (அ)

# முதியோரின் கொடுப்பனவு பெறுவதில் இழுபறி நிலை

கொழும்பு, செப். 24

முதியவர்களுக்கு என வழங்கப்படுகின்ற கொடுப்பனவு 20 ஆம் திகதி தொடக்கம் 25 ஆம் திகதி வரை அருகில் உள்ள தபால் நிலையங்களில் வழங்கப்பட்டது.

தற்போது சமுர்த்தி வங்கியின் ஊடாக அதனை பெற்றுக் கொள்ளவேண்டுமென தபால் அதிபர்கள் தெரிவித்துள்ளனர். இதனால் மக்கள் தமது முதியோர் கொடுப்பனவைப் பெற பல கிலோமீற்றர் தூரங்களில் இருந்தும் சமுர்த்தி வங்கிக்குச் சென்று பணத்தைப் பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

பணத்தை பெறவேண்டுமாயின் அதற்கான வங்கிக் கணக்கை புதிதாக திறக்கவேண்டும் என சமுர்த்தி வங்கியினர் தெரிவித்துள்ளனர்.

அப்படி திறந்த பின்பும், தமக்கு இன்னும் பணம் கிடைக்கப்பெறவில்லை எனவும், கிடைத்தவுடன் கிராம சேவையாளர் ஊடாக தெரியப்படுத்திய பின் வந்து கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ளலாம் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதன் காரணமாக தமக்கு வழங்கப்படுகின்ற ஆயிரத்து 900 ரூபாய் பணத்தைப் பெறுவதற்காக 2,000 ரூபாய்க்கு அதிகமான பணத்தை செலவிடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக முதியவர்கள் பலர் கவலை தெரிவித்துள்ளனர்.

குறித்த உதவிப் பணத்தை தபால் நிலையங்களில் ஊடாகவே பெறுவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஒழுங்கமைத்து தரவேண்டும் என முதியவர்கள் கோரியுள்ளனர். (அ)

# நெல் கொள்வனவுக்கு 500 மில்லியன் ரூபா!

கொழும்பு, செப். 24

விவசாயிகளிடமிருந்து நெல்லை கொள்வனவு செய்வதற்காக நெல் சந்தைப்படுத்தல் சபை 500 மில்லியன் ரூபாவை பெறவுள்ளதாக விவசாய திணைக்களம் தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் சம்பந்தப்பட்ட அமைச்சருடனான சந்திப்பின்போதே இத்தீர்மானது விவசாய அமைச்சின் செயலாளர் ரோஹண புஸ்பகுமார தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு மானியமாக உழவர் அறக்கட்டளை நிதியிலிருந்து 200 மில்லியன் ரூபா மற்றும் விவசாய காப்புறுதி சபையிடமிருந்து 300 மில்லியன் ரூபாவாகவும் வழங்கப்படவுள்ளது.

நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு கடனாக நிதி வழங்கப்படவுள்ளது.

நிதி வழங்கப்பட்டவுடன் பெரும் போகத்திற்கான நெல் கொள்வனவுகளை மீண்டும் ஆரம்பிக்க முடியும் என சபை அறிவித்துள்ளது. (அ)

# வடக்குக்கான ரயில் சேவை 5 மாதங்கள் நிறுத்தப்படும்!

## *ரயில் பாதை புனரமைப்புப் பணிக்காக*

கொழும்பு, செப். 24

**இந்தியாவின் நிதி உதவித் திட்டத்தின் கீழ் வடக்குக்கான ரயில் பாதை புனரமைப்புப் பணிகள் எதிர்வரும் ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளன. இதன்போது ஜனவரி மாதம் முதல் ஐந்து மாதங்களுக்கு வடக்குக்கான ரயில் சேவைகள் நிறுத்தப்படும் என ஊடகத்துறை மற்றும் போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் தமிழ் பத்திரிகைகளின் ஊடகவியலாளர்களுடன் கலந்துரையாடிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தியாவின் நிதி உதவித் திட்டத்தின் கீழ் வடக்குக்கான ரயில் பாதை புனரமைப்புப் பணிகள் எதிர்வரும் ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்பட இருக்கின்றன.

வடக்கு மக்களுக்கு சிறந்த ரயில் சேவையை பெற்றுக்



கொடுக்கும் நோக்கிலேயே வடக்குக்கான ரயில் பாதை புனரமைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

மேற்படி புனரமைப்பு நடவடிக்கைகளுக்காக ஜனவரி மாதம் முதல் ஐந்து மாதங்களுக்கு வடக்குக்கான ரயில் சேவைகள் நிறுத்தப்பட உள்ளன.

அரச ஊழியர்களின் நலன் கருதி காங்கேசன்துறைக்கும் கிளிநொச்சிக்கும் இடையில் விசேட ரயில் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டு அது சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அதே வேளை வடக்குக்கான இரவு நேர சொகுசு ரயில் சேவைகளும் நடைமுறையில் உள்ளன-என்றார். (அ)

# விலங்குகளினால் பயிர்களுக்கு ஏற்படும் சேதங்களைக் குறைக்க வேலைத்திட்டம்

கொழும்பு, செப். 24

மயில், குரங்கு உள்ளிட்ட விலங்குகளினால் பயிர்களுக்கு ஏற்படும் சேதங்களை குறைப்பதற்கு குறுகிய காலத்தில் பிரயோகரீதியான வேலைத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதாக கமத்தொழில் அமைச்சர் மற்றும் வனசீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

கமத்தொழில் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக்குழுக் கூட்டம் பாராளுமன்றத்தில் இடம்பெற்றபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

வனவிலங்குகளினால் பயிர்களுக்கு ஏற்படும் சேதங்கள் தொடர்பில் குழுவில் கலந்துகொண்ட உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியயமைக்குப் பதிலளிக்கும் வகையில் அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் உரிய அனைத்துத் தரப்பினர்களினதும் கருத்துக்களை பெற்றுக் கொள்வதன் அவசியம் குறித்து அமைச்சர் சுட்டிக்காட்டியது டன் சகலரினதும் ஆதரவை தான் எதிர்பார்ப்பதாகக் குறிப்பிட்டார்.

இதேவேளை, நுவரெலியா மாவட்டத்தில் பயிற்செய்கையில் ஈடுபடும் மரக்கறி விவசாயிகளுக்கு உரம் மற்றும் எரிபொருள் வழங்குவது தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

மேலும், விலங்கின நலம் பேணல் சட்டமூலம் தொடர்பிலும் அமைச்சுசார் ஆலோசனைக் குழுவில் கருத்தில் கொள்ளப்பட்டது. இதன்போது இந்தச் சட்டமூலம் குறித்த விளக்கம் தேவையென வருகை தந்த உறுப்பினர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க மற்றுமொரு தினத்தில் இது தொடர்பில் கலந்துரையாடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. (அ)

# இலங்கைக்கு முழுஒத்துழைப்பு; வெளிநாட்டு தூதுவர்கள் உறுதி

கொழும்பு, செப். 24

பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகளைப் பெற்றுக்கொள்ள இலங்கைக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதாக வெளிநாட்டு தூதூவர்கள் ஜனாதிபதியிடம் உறுதியளித்துள்ளனர்.

கடன் மறுசீரமைப்பு மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் கடன் உதவியைப் பெறுவது தொடர்பில் ஜனாதிபதி வெளிநாட்டுத் தூதுவர்களுக்கு விளக்கமளித்தார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று முன் தினம் பிற்பகல் நடைபெற்ற இச்சந்திப்பின் போது, சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகளைப் பெறுவதற்கும், கடன் மறுசீரமைப்பிற்கும் தமது ஒத்துழைப்பை வழங்குவதாக வெளிநாட்டுத் தூதுவர்கள் ஜனாதிபதியிடம் உறுதியளித்தனர்.

பரிஸ் க்ளப் மற்றும் பரிஸ் க்ளப்பில் அங்கத்துவம் அல்லாத 23 நாடுகளின் தூதுவர்கள் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

இலங்கை எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு தமது முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதாகவும் இலங்கை நிச்சயம் இப்பிரச்னையிலிருந்து மீண்டெழும் என்றும் வெளிநாட்டுத் தூதுவர்கள் இதன்போது நம்பிக்கை வெளியிட்டனர்.

கடன் மறுசீரமைப்பு தொடர்பான கலந்துரையாடல்களை இவ்வருட இறுதிக்குள் நிறைவு செய்ய எதிர்பார்ப்பதாகவும் அதற்கு தேவையான அனைத்து அர்ப்பணிப்புக்களை செய்து வருவதாகவும் ஜனாதிபதி இதன்போது வெளிநாட்டு தூதுவர்களிடம் சுட்டிக்காட்டினார்.

இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலை மற்றும் கடன் மறுசீரமைப்பு தொடர்பான முன்னேற்றம் குறித்து நிதியமைச்சின் செயலாளர் மகிந்த சிறிவர்தன மற்றும் மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க ஆகியோர் இதன்போது விளக்கமளித்தனர்.

இதனையடுத்து, வெளிவிவகார தூதுவர்களுக்கு நன்றி தெரிவித்த ஜனாதிபதி, எதிர்கால சந்ததியினருக்காக தற்போதைய நெருக்கடியை , வெற்றி கொள்வதற்கு அனைவரும் ஒத்துழைக்கவேண்டும் என கேட்டுக்கொண்டார்.

இதற்காக அரசாங்கம் வெளிப்படைத் தன்மையுடனும், சமத்துவத்துடனும் பணியாற்றும் என்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

இராஜாங்க அமைச்சர்களான ரஞ்சித் சியம்பலாபிட்டிய, தாரக்க பாலசூரிய, ஷெஹான் சேமசிங்க, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் தலைவருமான சாகல ரத்நாயக்க, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜயவர்தன உள்ளிட்ட பல அரசாங்க அதிகாரிகளும் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர். (அ)

# கனரக வாகனம் விபத்து

கொழும்பு, செப். 24

வெலிமடை பகுதியிலிருந்து கொழும்பு பகுதிக்கு உருளைக்கிழங்குகளை ஏற்றிச் சென்ற கனரக வாகனம் ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளது.

ஹற்றந்கொழும்பு பிரதான வீதியில் கினிகத்தேனை கடவளை பகுதியில் வைத்து, குறித்த கனரக வாகனம் வீதியை விட்டு விலகி குடைசாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

நேற்றுக் காலை 6.30 மணியளவில் இந்த விபத்து நேர்ந்துள்ளதாக கினிகத்தேனை போக்குவரத்து பொலிஸார் தெரிவித்தனர்.

சாரதியின் கவனயீனமே விபத்துக்குக் காரணம் என தெரிவிக்கப்படுகின்றது.

லொறியில் சாரதியும், உதவியாளரும் பயணித்துள்ளதாகவும், எனினும் உதவியாளர் படுங்காயங்களுக்குள்ளாகி நாவலப்பிட்டி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த லொறியில் இருந்த உருளைக்கிழங்கை பிரதேச மக்களின் உதவியுடன் மற்றுமொரு லொறிக்கு ஏற்றிச் செல்ல நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. (அ)

# இந்தியாவில் உள்ள இலங்கையர்கள் தாயகம் திரும்ப தயக்கம் - கள நிலவரம் என்ன?

**பிரபுராவ் ஆனந்தன்**

இலங்கை இறுதி கட்ட போரின்போது இந்தியாவில் அகதியாக தஞ்சம் அடைந்த இலங்கை அகதிகளை மீண்டும் அவர்களின் தாயகத்துக்கே அழைத்து வர இலங்கை ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏகநாயக்க குழு ஒன்றை நியமித்துள்ளார். ஆனால், தங்களுடைய இலங்கைக்கு திரும்ப பெரும்பாலான இலங்கை தமிழர்கள் விரும்பவில்லை என்று தமிழ்நாட்டில் வாழும் இலங்கை தமிழர்கள் தெரிவிக்கின்றனர்.

இலங்கையில் ஏற்பட்ட இறுதி கட்ட போரின் போது இந்தியாவுக்கு அகதிகளாக இடம்பெயர்ந்த இலங்கையரை மீண்டும் இலங்கை அழைத்து வர வேண்டும் என "ஈழ அகதிகள் புனர்வாழ்விற்கான அமைப்பு" வேண்டுகோள் முன்வைத்திருந்தது. இது குறித்து பேசுவதற்காக, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏகநாயக்க தலைமையில் ஜனாதிபதி அலுவலகத்தில் சந்திப்பு ஒன்று நடைபெற்றது.

அப்போது இலங்கை ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் சந்திமா விக்ரமசிங்க தலைமையில் சிறப்பு குழு ஒன்றை அமைத்து அதில் குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் அதிகாரி, வெளிவிவகார அமைச்சரக உயர் அதிகாரிகள், மற்றும் நீதி அமைச்சகத்தின் சிறப்பு அதிகாரிகளை உறுப்பினர்களாக நியமித்தார்.

இந்தியாவில் தற்போது அகதிகளாக தங்கியுள்ள இலங்கையர்கள் 3,800 பேர் மட்டும் இலங்கைக்கு திரும்புவதற்கு தயாராக இருப்பதாகவும் அப்போது சுட்டிக்காட்டப்பட்டது.

இதையடுத்து இந்தியாவில் உள்ள இலங்கை அகதிகளை இலங்கை அழைத்து வருவதற்காக சென்னையிலுள்ள இலங்கைத் துனை தூதரகமும் இச்செயல் முறையை எளிதுபடுத்துவதற்கான ஒத்துழைப்பு வழங்கும் என தெரிவிக்கப்பட்டது.

இந்த கூட்டத்தில் பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் எம்.எம்.பி.கே. மாயாதுன்னே, வெளிவிவகார அமைச்சகத்தின் செயலாளர் அருணி விஜேவர்தன, நீதி அமைச்சகம் மற்றும் குடிவரவு, குடியகல்வு துறை அதிகாரிகள் ஆகியோருடன் ஈழ அகதிகள் புனர்வாழ்வுக்கான அமைப்பின் பிரதம செயற்பாட்டாளர் சி.எஸ். சந்திரஹாசன், எஸ்.சூரியகுமாரி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.






### இலங்கைக்கு மீண்டும் அழைப்பதில் என்ன நியாயம்?

இலங்கையில் இறுதிகட்ட போர் நடைபெற்றபோது அங்கிருந்து அகதியாக வந்து மண்டபம் அகதிகள் முகாமில் தங்கியிருப்பர் மோகன்ராஜ். இவர் 2006ஆம் ஆண்டில் அகதியாக தமிழ்நாடு வந்தார்.

தற்போது இந்தியாவில் உள்ள இலங்கை அகதிகளை மீண்டும் தாயகத்துக்கு அழைத்து செல்ல இலங்கை அரசு சிறப்புக் குழு அமைத்து அதற்கான வழிமுறைகளை எளிமைபடுத்துவதாக தெரிவித்துள்ளது. இது குறித்து மோகன்ராஜிடம் கேட்டபோது, "அது இலங்கை அரசின் கண்துடைப்பு நாடகம்," என்று கூறினார்.

தமிழ்நாட்டில் தங்கியுள்ள இலங்கைத் தமிழர்களை இலங்கைக்கு அழைத்து அதையே காரணமாகக் கூறி வெளிநாடுகளிலிருந்து நிதி பெறுவதற்காக இலங்கை அரசு முயற்சி இது என்று அவர் தெரிவித்தார்.

"2012 முதல் 2019 வரை அதாவது கொரோனா பரவலுக்கு முன்பு சுமார் ஆயிரக்கணக்கான மக்கள் தமிழ்நாட்டில் இருந்து மீண்டும் இலங்கைக்கு திரும்பிச் செல்வதற்கு முயற்சி செய்தோம். ஆனால் அப்போது இலங்கை அரசு எங்கள் கோரிக்கைகள் எதையும் பரிசீலிக்கவில்லை. தற்போது இலங்கையில் ஏற் பட்டுள்ள பஞ்சத்தால் எங்களை மீண்டும் இலங்கைக்கு அழைக்கின்றனர்," என்கிறார் மோகன்ராஜ்.

"இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கை தமிழர்கள் பலரும் இந்தியாவில் புகலிடம் தேடி அகதியாக தமிழகம் வந்து கொண்டிருக்கும் சூழ்நிலையில், எங்களை மீண்டும் இலங்கைக்கு திருப்பி அழைப்பது எந்த விதத்தில் நியாயம்? இலங்கை அரசு சுயலாபத்திற்காக மட்டுமே இந்த குழுவை அமைத்துள்ளது," என்கிறார் மோகன்ராஜ்.

### தமிழர்களின் வாக்குகளை பெற மீண்டும் நாட்டுக்கு அழைக்கிறதா?

"இந்தியாவில் தங்கியுள்ள இலங்கை தமிழர்கள் மீண்டும் இலங்கைக்கு சென்றால் அது நாட்டின் மீதுள்ள பாசத்தால் இருக்காது. இலங்கைக்கு சென்று அங்கிருந்து வெளிநாடுகளுக்கு செல்ல வேண்டும் என்ற ஒரே காரணத்துக்காக மட்டுமே அவர்கள் மீண்டும் இலங்கைக்கு திரும்பிச் செல்ல நினைப்பர்.

தமிழக முகாம்களில் தங்கியுள்ள 25 சதவீத இலங்கை தமிழர்கள் மீண்டும் சொந்த நாட்டுக்கு செல்ல வாய்ப்பு இருக்கிறது. அவர்களை பொறுத்த அளவு இந்தியாவில் அகதிகளாக வாழ்வதை விட சொந்த நாட்டில் வாழ்வோம் என்ற எண்ணத்தில் செல்கின்றனர்.

அப்படி இலங்கைக்கு திரும்பிச் செல்லும் இலங்கை தமிழர்களுக்கு அந்நாட்டு அரசாங்கம் ஓராண்டுக்கு தேவையான நிதி உதவியை அளிக்க வேண்டும், தங்க வீடு உள்ளிட்டவற்றை கொடுத்தால் நிச்சயம் மக்கள் தாயகத்துக்கு திரும்பி செல்வார்கள்," என்கிறார் அவர்.

"இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக அரசின் மீது சிங்கள மக்கள் கடும் கோபத்தில் உள்ளனர். வரும் தேர்தலில் சிங்கள மக்களின் வாக்கு கிடைக்காது என்பதால் இலங்கை தமிழர்களை மீண்டும் இலங்கைக்கு வரவழைத்து அவர்களின் வாக்குகளை பெற்று மீண்டும் ஆட்சி அமைப்பதற் கான நடவடிக்கையாக கூட இந்த நடவடிக்கை இருக்கலாம்," என்கிறார் மோகன்ராஜ்.

### குழந்தைகளின் எதிர்காலத்திற்கு இலங்கை அரசு உத்தரவாதம் உண்டா?

இலங்கைக்கு குடிமக்களை மீண்டும் அழைப்பது தொடர்பாக மண்டபம் அகதிகள் முகாமில் தங்கியுள்ள 75 வயது மூதாட்டி மணியம்மாவிடம் பேசினோம்.

"நான் என் குடும்பத்துடன் இலங்கையில் இருந்து இந்தியாவுக்கு அகதியாக தஞ்சம் அடைந்தேன். 1989ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் மண்டபம் அகதிகள் முகாமில் தங்கி உள்ளேன். என்னுடைய மகன், மகளுக்கு இந்தியாவில் திருமணமாகி என்னுடைய பேரக்குழந்தைகள் இங்குதான் பிறந்தார்கள். அவர்களுக்கு இலங்கையை பற்றி ஒன்றும் தெரியாது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் அவர்களை எப்படி மீண்டும் இலங்கைக்கு அழைத்துச் செல்வது?" என்று கேட்கிறார் மணியம்மா.

என்னுடைய பேரக்குழந்தைகள் அனைவரும் இங்கு பள்ளி மற்றும் கல்லூரிகளில் படித்து வருகின்றனர். அவர்கள் படிப்பை நாங்கள் இலங் கைக்கு சென்றால் எப்படி தொடர முடியும்? மீண்டும் இலங்கைக்கு திரும்பினால் அங்கு நாங்கள் அகதியாகதான் இருக்க வேண்டும்.

இங்கு படித்து பெற்ற இந்த சான்றிதழ்கள் இலங்கையில் பயன்படாது. இங்கு எங்கள் குழந்தைகள் அரசு வேலைக்கு செல்ல முடியாவிட்டாலும் தனியார் நிறுவனங்களில் நல்ல வேலையில் உள்ளனர்.

எந்தவிதமான அடிப்படை வசதியும் இல்லாமல் திடீரென்று இலங்கை திரும்பிப் போகச் சொன்னால் எப்படி செல்வது? ஒரு நல்ல கட்டமைப்பை ஏற்படுத்தி கொடுத்து இங்கிருந்து எங்களை அனுப்பி வைத்தால் பரவாயில்லை.



ஈழ அகதிகள் புனர்வாழ்விற்கான அமைப்பு குறிப்பிடுவதுபோல் 3,000 பேர் இலங்கைக்கு திரும்ப விருப்பம் தெரிவித்திருந்தனர். ஆனால் அது 7 ஆண்டுகளுக்கு முன்பு தெரிவிக்கப்பட்ட தகவல்.

இலங்கை தமிழர்கள் அவர்களுடைய பொருட்களை கப்பலில் எடுத்துக் கொண்டு மீண்டும் இலங்கைக்கு செல்ல வாய்ப்பு இருப்பதாக கூறியதை அடுத்து இந்த விருப்பத்தை அவர்கள் தெரிவித்தனர்.

(09 ஆம் பக்கம் பார்க்க...)

# இந்தியாவில் உள்ள இலங்கையர்கள்...

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

ஆனால் தற்போதைய சூழ்நிலையில் நிச்சயம் இலங்கை தமிழர்கள் மீண்டும் இலங்கைக்கு செல்ல விருப்பம் தெரிவிக்க மாட்டார்கள்.

இலங்கை அரசு நாட்டுக்கு திரும்பி அழைத்து கொண்டால் இந்தியாவில் பிறந்த குழந்தைகளின் பிறப்பை பதிவு செய்து அரசியல் சட்டத்தின்படி இலங்கையில் குடியுரிமை அளிக்க வேண்டும், பிள்ளைகளுக்கு கல்வியை உறுதிப்படுத்த வேண்டும், அதேபோல் எங்களுடைய வாழ்வாதாரத்திற்கான பொருளாதாரத்தை ஏற்பாடு செய்து கொடுத்தால் மட்டுமே இந்தியாவில் இருந்து இலங்கை தமிழர்கள் மீண்டும் இலங்கைக்கு திரும்பி செல்ல வாய்ப்பு இருப்பதாக மணியம்மா தெரிவித்தார்.



### நிச்சயம் திரும்பி போக மாட்டேன்:

பட்டதாரி பெண்ணான மேரி, 2006 ஆம் ஆண்டில் நிலவிய பிரச்சினை காரணமாக தமிழ்நாட்டுக்கு வந்தவர். இவரும் அகதியாக மண்டபம் அகதிகள் முகாமில் தங்கி உள்ளார்.

இலங்கைக்கு திரும்பிப் போகும்




எண்ணத்தில் தாம் நிச்சயம் இல்லை என்கிறார் அவர். அதற்கான காரணத்தையும் அவர் விளக்குகிறார்.

“தமிழ்நாட்டில் தான் நான் பட்டப் படிப்பு முடித்துள்ளேன். இந்த படிப்பிற்கான சான்றிதழ் இலங்கையில் ஏற்றுக் கொள்ளப்படாது. எனவே, என்னுடைய படிப்பு முற்றிலும் பயனற்றுப் போய்விடும். எனவே, நான் இங்கிருந்து இலங்கை செல்ல விரும்ப மாட்டேன்.

இந்தியாவில் இருந்து நாங்கள் அனைத்து நாடுகளுக்கும் செல்லக் கூடிய பாஸ்போர்ட் வழங்கப்படவில்லை. இதனால் நான் 4 ஆண்டுகளுக்கு முன் இலங்கை சென்று எனது உறவினர்கள் வீட்டில் சில மாதங்கள் தங்கி அடையாள அட்டை பெற்றேன். பின்னர் அனைத்து நாடுகளுக்கும் செல்லக் கூடிய பாஸ்போர்ட் பெற்று வெளிநாடு செல்ல திட்டமிட்டிருந்தேன். ஆனால் தற்போது இலங்கையில் நீடித்து வரும் பொருளாதார நெருக்கடி யால் எனது உறவினர்கள் சாப்பிட கூட வசதி இல்லாமல் உள்ளனர். இந்த நிலையில் நான் எப்படி அங்கு சென்று தங்க முடியும்?” என்று கேட்கிறார் மேரி.

“தமிழ்நாட்டில் இலங்கை தமிழர்களுக்கு அரசு பல நலத்திட்ட உதவிகளை அறிவித்துள்ளது. ஆனாலும் இந்தியாவில் இருந்து மீண்டும் இலங்கை செல்வதாக முடிவு செய்திருந்த பலரும் மீண்டும் இலங்கைக்கு செல்ல மறுத்து வருகின்றனர்.

கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு, மண்டபம் அகதிகள் முகாமில் இருந்து 150 பேர் குடும்பம், குடும்பமாக இலங்கை செல்ல விண்ணப்பித்தனர். இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக குடும்பத்துடன் செல்ல மறுத்து இந்தியாவில் தங்க விருப்பம் தெரிவித்து விட்டனர்.

இலங்கை அரசு மீண்டும் எங்களை அழைத்தாலும் பெரும்பாலான இலங்கைத் தமிழர்கள் அங்கு செல்ல விருப்பம் தெரிவிக்க மாட்டார்கள் என்பது தான் உண்மை,” என்கிறார் பட்டதாரி பெண் மேரி.

### தமிழ்நாடு வந்தது ஏன்?

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக தமிழகம் வந்து மண்டபம் அகதிகள் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளார் தலை மன்னாரை சேர்ந்த சசிகுமார். இவரும் இலங்கைக்கு திரும்பி அழைத்து வர அரசு மேற்கொண்டுள்ள முயற்சியை ஆதரிக்கவில்லை.

“இலங்கை பொருளாதார நெருக்கடி காரணமாக எனது வீடு, நகைகள் உள்ளிட்டவற்றை விற்று குடும்பத்துடன் அகதியாக படகு மூலம் தமிழகம் வந்து மண்டபம் அகதிகள் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளேன். சுமார் இரண்டு மாதங்களுக்கு மேலாகியும் இந்திய அரசு எங்களை அகதியாக பதியவில்லை. இந்தச் சூழ்நிலை யில் இலங்கை அரசு மீண் டும் எங்களை அழைத்துள்ளது,” என்கிறார் சசிகுமார்.

“எங்களை மீண்டும் இலங்கைக்கு அழைப்பது ஏற்றுக்கொள்ள முடியாதது. இலங்கை அரசு சுயலாபத்திற்காக எங்களை மீண்டும் இலங்கைக்கு அழைக்கிறது. இலங்கைத் தமிழர்களுக்கு நல்லது செய்ய வேண்டும் என நினைத்திருந்தால் எப்பவோ எங்களுக்கான உரிமையை கொடுத்து இருக்கலாம் ஆனால், எங்களை இலங்கையில் இன்னும் அகதிகளாகதான் இலங்கை அரசு வைத்துள்ளது,” என்கிறார் சசி.



இலங்கையில் வாழ வழியில்லாமல் தான் இந்தியா வந்தோம். எப்படி மீண்டும் இலங்கைக்கு செல்வது. அங்கிருக்கும் அனைத்தையும் விற்று விட்டு வந்த என்னால் எப்படி குடும்பத்துடன் இலங்கை சென்று வாழ முடியும்.

இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக 150க்கும் மேற்பட்டோர் அகதிகளாக வந்து மண்டபம் முகாமில் தங்கி உள்ளனர். அதில் 130 பேர் முன்னதாகவே இலங்கையில் இருந்து இந்தியா வந்து அகதியாக தங்கி இருந்து இலங்கையில் அமைதி திரும்பியதால் தாய்நாட்டுக்குச் சென்றவர்கள். கடந்த மார்ச் மாதம் முதல் நீடித்து வரும் பொருளாதார நெருக்கடியில் இருந்து தப்பிக்க அவர்கள் கடந்த சில மாதங் களுக்கு முன்பு இந்தியாவுக்கு மீண்டும் வந்தவர்கள். ஆனால், இம்முறை அவர்கள் அகதியாக பதிவு செய்யப்படாமல் மனிதாபிமான அடிப்படையில் உணவு, உறைவிடம் கொடுத்து ஆதரிக்கப்பட்டு வருகின்றனர்.

இவர்கள் தங்களை அகதியாக பதிவு செய்யக் கோரியும் இந்திய வெளியுறவுத்துறை எந்த முடிவும் எடுக்காததால் தமிழ்நாடு அரசு இவர்களை மற்ற அகதிகள் வாழும் மண்டபம் அகதிகள் முகாமிலேயே ஒரு பகுதியில் தங்க அனுமதித்துள்ளது.

இந்த நிலையில், தற்போது இந்தியாவில் கடந்த 40 ஆண்டுகளாக அகதியாக தஞ்சம் அடைந்த இலங்கையர்களை தாயகத்துக்கே அழைத்து வர இலங்கை ஜனாதிபதியின் செயலாளர் நியமித்துள்ள குழு, இந்தியாவில் வாழும் இலங்கையர்கள் மத்தியில் பேசு பொருளாகியிருக்கிறது.

### இலங்கை அரசின் முழு அறிவிப்பு இன்னும் கிடைக்கவில்லை

இதற்கிடையே, சிறப்புக் குழு கூட்டத்தில் கலந்து கொண்ட ஈழ அகதிகள் புனர்வாழ்வுக்கான அமைப்பின் பிரதம செயற்பாட்டாளர் சி.எஸ். சந்திரஹாசனிடம் இந்த கூட்டத்தில் ஆலோசிக்கபட்ட கருத்துக்கள் குறித்து கேட்டபோது அவர் அறிக்கை ஒன்றை மின்னஞ்சல் மூலம் அனுப்பி இருந்தார்.

அதில், “செப்டம்பர் 5, 2022 அன்று இலங்கை அரசு தமிழகத்தில் வாழும் இலங்கை ஏதிலியர் மற்றும் நாடு திரும்பியவர்கள் தொடர்பான அக்கறை கொண்ட துறைகள் ஒரு சந்திப்புக்காக அழைத்திருந்தது. இச்சந்திப்பு 2012 முதல் மூகுநுசுசு நிறுவனம் அரசாங்கத்துடன் ஏதிலியர் மற்றும் நாடு திரும்பியவர்கள் சம்பந்தமான சந்திப்புகளில் தொடர்ச்சியாக நடத்தப்பட்டது.

இச்சந்திப்பின் நோக்கமானது நாடு திரும்பியவர்களின் நிலையை அறிவதற்கும் இந்தியாவிலிருந்து நாடு திரும்ப உத்தேசிப்பவர்களின் நிலையை புரிந்து கொள்வதற்காகவும் நடத்தப்பட்டது. இச்சந்திப்பில் இலங்கை அரசாங்கம் இப்பிரச்னையை கூர்ந்து நோக்குவதற்காக ஒரு குழுவை அமைப்பதாக அறிவித்தது. அதனடிப்படையில் ஒரு குறுஞ்செய்தியும் வெளியிடப்பட்டது.“ என குறிப்பிடப் பட்டுள்ளது.

(பிபிசி)



# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்


● 1, 2 ஆகிய வினாக்களில் முதலில் தரப்பட்ட பகுதியைப் பூரணப்படுத்துவதற்குரிய மீதிப்பகுதியைத் தெரிவு செய்க.

**01.** வண்ணத்துப்பூச்சியின் ஒருபகுதி முன்னே தரப்பட்டுள்ளது.



(1) (2) (3)

**02.**



(1) (2) (3)

**03.** இங்குள்ள உருக்களில் காட்டப்பட்டுள்ள பிராணிகளை மூன்று கூட்டங்களாகப் பிரிக்கலாம்.



A B C D E F

இக் கூட்டங்களைச் சரியாகக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

(1) A, C / D, E / B, F

(2) A, E / B, C / D, F

(3) C, F / B, D / A, E

**04.** **“பல்கலைக்கழகம்”** எனும் சொல்லிலுள்ள எழுத்துக்களைப் பயன்படுத்தி ஆக்கக் கூடிய சொற்களைக் கொண்ட விடைத் தொகுதி எது?

(1) பல், பழம், பகல், கழகம், காலை, கல், பாகல்

(2) பல், கல்வி, பகல், கழகம், கலை, கல், பக்கம்

(3) பல், பழம், பகல், கழகம், கலை, கல், பக்கம்


**05.** சந்திரன் தோன்றாத ஒரு நாளில் நள்ளிரவில் வீட்டிலிருந்து வெளியே வந்து வானத்தைப் பார்க்கும்போது தொலைவில் உள்ள வானில் பறந்து செல்லும் கிளிக் கூட்டத்தைக் காணலாம் எனக் காவியா கூறுகின்றாள். இது நடைபெற இயலாது இதற்குக் காரணம்

(1) இருளில் அத்தகைய ஒரு நிகழ்ச்சியைப் பார்க்க முடியாமை.

(2) இரவில் கிளிகள் பறந்து செல்ல வேண்டிய தேவை இல்லை.

(3) கிளிகள் கூட்டமாகப் பறந்து செல்லாமை.

**06.** உருக்கோலத்தில் அடுத்து வரவேண்டிய உருவைத் தெரிக.



(1) (2) (3)

**07.** உலக மரபுரிமை மையங்களாக ........................ நிறுவனத்தால் இலங்கையில் பாரம்பரிய இடங்கள் எனப் பிரகடனப்படுத்தப்பட்டன. அவற்றுள் பொலன்னறுவை புராதன நகரம், அனுராதபுரம் புனிதநகரம், சிகிரியா புராதன நகரம், .............................. போன்றவை சில இடங்களாகும்.

முதலாம் வெற்றிடத்திற்கும் இரண்டாம் வெற்றிடத்திற்கும் முறையே மிகப் பொருத்தமான சோடிச் சொற்களை தெரிவு செய்க.


(1) யுனிசெப், காலிக்கோட்டை

(2) யுனேஸ்கோ, யாழ்கோட்டை

(3) யுனெஸ்கோ, தங்கக்கோயில் (கோல்டன் டெம்பிள்)

## விடைகள்

**01.** (3) 

**02.** (1) 

**03.** (3) C, F / B, D / A, E

## கல்வி TV CHANNEL-1

**24.09.2022**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | தமிழ் |
| 08.15 | தரம்-10 | வரலாறு |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | சித்திரம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறு ஒளிபரப்பு |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | வரலாறு |

## கல்வி TV CHANNEL - 2

**24.09.2022**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | English |
| 09.45 | தரம்-03 | அழகியல் |
| 10.30 | தரம்-03 | கணிதம் |
| 11.15 | தரம்-04 | English |
| 12.30 | தரம்-04 | கணிதம் |
| 01.15 | தரம்-05 | Singalam |
| 02.00 | தரம்-05 | கணிதம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | English |
| 06.00 | தரம்-03 | அழகியல் |
| 06.45 | தரம்-03 | கணிதம் |
| 07.30 | தரம்-04 | English |
| 08.15 | தரம்-04 | கணிதம் |
| 09.00 | தரம்-05 | Singalam |
| 09.45 | தரம்-05 | கணிதம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | அழகியல் |
| 12.30 | தரம்-03 | கணிதம் |
| 01.15 | தரம்-04 | English |
| 02.00 | தரம்-04 | கணிதம் |
| 02.45 | தரம்-05 | Singalam |
| 03.30 | தரம்-05 | கணிதம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# மாகாண சுகாதார சேவை பணிப்பாளருக்கு வரவேற்பு



அம்பாறை, செப். 24
புதிதாக கடமைகளை பொறுப்பேற்ற கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் டீ. ஜி. மலின்டன் கொஸ்டாவை வரவேற்கும் நிகழ்வும், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினால் முன்னெடுக்கப்படவுள்ள திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடலும் நேற்று முன் தினம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஐ.எல்.எம். றிபாஸ் தலைமையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் பிரதி பணிப்பாளர் எம்.பி.அப்துல் வாஜித் ஆரம்ப உரையையும் பணிப்பாளர் தலைமை உரையையும் நிகழ்த்தியதுடன் பிரதம அதிதியாக கலந்துகொண்ட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் சிறப்புரை நிகழ்த்தப்பட்டது.

இந்நிகழ்வில் மாகாண பணிப்பாளர் கல்முனை பிராந்திய பணிமனையினால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அரிசி ஆலைகளை கிழக்கில் நிறுவ நடவடிக்கை வேண்டும்

## குச்சவெளி தவிசாளர் முபாறக் வேண்டுகோள்

அம்பாறை,செப்.24

**சிறுவர்கள், கர்ப்பிணித் தாய்மார், பாடசாலை மாணவர்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களை உள்ளடக்கிய போசனைக் கொள்கைத் திட்டத்தை எமது பிரதேசத்தில் அமுல்படுத்துகின்ற அதேவேளை, அரிசி ஆலைகளையும் எமது பிரதேசத்தில் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என குச்சவெளி பிரதேசசபை தவிசாளர் எம்.முபாறக் தெரிவித்தார்.**



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கிராமப்புற பொருளாதார மறுமலர்ச்சி மூலம் வறுமையை ஒழித்தல் எனும் தொனிப்பொருளின் கீழ் தேசிய உணவு பாதுகாப்புத் திட்ட பிரதேச மட்ட கலந்துரையாடல் நேற்று முன் தினம் குச்சவெளி பிரதேச செயலாளர் கே.குணநாதன் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்ட குச்சவெளி பிரதேச சபை தவிசாளர் எம்.முபாறக் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதியின் இத்திட்டத்தின் மூலம் கிராமப்புற மக்களின் பொருளாதார மறுமலர்ச்சியை உருவாக்குவதுடன் அவர்களின் வறுமையையும் ஒழிக்க முடியும். அத்துடன் சிறுவர்கள், கர்ப்பிணித் தாய்மார், பாடசாலை மாணவர்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோர்களுக்கு சத்துணவு வழங்குவதன் மூலம் அவர்களின் ஊட்டச்சத்து குறைபாட்டிலிருந்து விடுவித்து, உணவுப் பாதுகாப்பையும், வாழ்க்கைத் தரத்தையும் மேம்படுத்த முடியும். இதன் மூலம் பாதுகாப்பான அரோக்கிய கிராமத்தை உருவாக்க முடியும்.

குச்சவெளி பிரதேசத்தில் கால்நடைகளின் தொல்லை வெகுவாக அதிகரித்துக் காணப்படுகின்றது. இதனால் விபத்துச் சம்பவங்களும் அதிகரித்து வருகின்றன. கால்நடைகளை ஒரு கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவராவிட்டால் இன்னும் பல ஆபத்துக்களை நாம் எதிர்கொள்ள வேண்டிவரும். எமது மக்களையும், அவர்களின் சொத்துக்களையும், உயிர்களையும் பாதுகாக்க அதுதொடர்பான அதிகாரிகள் உடனடி நடவடிக்கை எடுக்க முன்வரவேண்டும். அவர்களுக்கான சகல ஒத்துழைப்புக்களை குச்சவெளி பிரதேச சபையும், சபை உறுப்பினர் களும் வழங்க என்றும் தயாராக இருக்கின்றோம்-என்றார். (அ)

# கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் இந்து நாகரிக பாட செயலமர்வு

அம்பாறை, செப். 24
கல்வி அமைச்சின் சமய விழுமியங்கள் பிரிவு ஏற்பாடு செய்த கபொத உயர்தர மாணவர்களுக்கான இந்து நாகரீகம் பாட செயலமர்வு நேற்று முன் தினம் நாவிதன்வெளி அன்னமலை மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

சம்மாந்துறை வலயத்தில் இம்முறை கபொத உயர்தர பரீட்சையில் இந்து நாகரீக பாடத்தில் தோற்ற இருக்கின்ற 92 மாணவர்களுக்கான இந்த செயலமர்வு நேற்று அதிபர் சீ. பாலசிங்கன் தலைமையில் நடைபெற்றது.

கல்வி அமைச்சிலிருந்து சமயங்கள் விழுமிய பிரிவின் பிரதிக்கல்வி பணிப்பாளர் எஸ்.சுந்தரலிங்கம் வளவாளராக கலந்து கொண்டார்.

அங்குரார்ப்பண நிகழ்வில் சம்மாந்துறை வலய கல்வி பணிப்பாளர் எஸ் எம் எம் அமீர், சம்மாந்துறை வலய உதவி கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா, ஆசிரிய ஆலோசகர்களான கே.இரத்னேஸ்வரன், எஸ். அர்ஜூனன் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

சம்மாந்துறை வலயத்திலுள்ள 8 தமிழ் பாடசாலைகளை சேர்ந்த 92 மாணவர்கள் கருத்தரங்கில் கலந்துகொண்டு பயன்பெற்றார்கள். (அ)

# பொதுமக்கள் நலன் சேவைகள் குறித்து விழிப்புணர்வூட்டும் செயலமர்வு ஆரம்பம்

சமுர்த்தி காரியாலயத்தினால் பொதுமக்கள் நலன் சேவைகள் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் செயலமர்வுகள் இறக்காமம் பிரதேச செயலாளர் எம்.எஸ்.எம். ரஷ்ஷான் இந் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் இறக்காமம் பிரதேச செயலக சமுர்த்திப் பிரிவினால் நடத்தப்படு வருகின்றன.

அந்தவகையில், இறக்காமம் 02 ஆம் கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள சமுர்த்தி, காத்திருப்போர் மற்றும் ஏனைய சகல குடும்பங்களுக்குமான சுகாதாரம், ஓய்வூதியம், சமுர்த்தி நலனோம்புத் திட்டங்கள் தொடர்பான பொதுமக்கள் நலன் சேவைகள் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் கருத்தரங்கு நேற்று முன் தினம் ஜீ. எம். எம்.எஸ் வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

பிரிவுக்கு பொறுப்பான சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒ.எல்.யாக்கூப் தலைமையில் நடைபெற்ற இவ்விழிப்புணர்வு கருத்தரங்கில் சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் எம்.சி.எம். தஸ்லீம் விஷேட அதிதியாக கலந்து கொண்டு சமுர்த்தி வேலைத் திட்டங்கள் தொடர்பாக மக்களுக்கு தெளிவுபடுத்தினார். (அ)

# வறுமையில் வாழ்வது ஒரு பலம்!

## பாராட்டு விழாவில் வலயக்கல்விப் பணிப்பாளர்



அம்பாறை, செப். 24

"வாழ்வில் வறுமை என்பது ஒரு பின்னடைவல்ல. அது ஒரு தடையுமல்ல. உண்மையில் வறுமையில் வாழ்வது என்பது ஒரு பலம் .அது நமக்கு பல படிப்பினைகளை ஏற்படுத்துகின்றது."

-இவ்வாறு தேசிய மட்ட போட்டிக்கு தெரிவான றாணமடு இந்து மகாவித்தியாலய கபடி மற்றும் எல்லே வீராங்கனைகளை பாராட்டும் விழாவில் உரையாற்றிய சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ். எம்.எம்.அமீர் தெரிவித்தார்.

நடைபெற்று முடிந்த கிழக்கு மாகாணமட்ட பெரு விளையாட்டு போட்டிகளில் கபடி மற்றும் எல்லே போட்டிகளில் மாகாணத்தில் சாம்பியனாகி, தேசிய ரீதியில் தெரிவான நாவிதன்வெளி கோட்டத்திற்கு உட்பட்ட றாணமடு இந்து மகா வித்தியாலய வீராங்கனைகளை பாராட்டுகின்ற நிகழ்வு நேற்று முன்தினம் அதிபர் எஸ்.கதிரைநாதன் தலைமையில் நடைபெற்றது.

நாவிதன்வெளி கோட்டக் கல்விப் பணிப்பாளர் திருமதி நிதர்சினி மகேந்திரகுமாரின் ஏற்பாட்டில் நடைபெற்ற பாராட்டு விழாவில் பிரதி கல்வி பணிப்பாளர் ஹைதர்அலி உதவி கல்வி பணிப்பாளர்களான ஏ. முஸ்ரக்அலி வி.ரி.சகாதேவராஜா ஆசிரியர் ஆலோசகர்களான பி.குணரத்ன பி. பிரதீஸ்வரன் மற்றும் அயல் பாடசாலை அதிபர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

இந்த பாராட்டு விழாவில் பணிப்பாளர் அமீர் மேலும் உரையாற்றுகையில்.

வறுமைதான் வாழ்வில் முன்னேறப்படி என்று சொல்வார்கள் நானும் ஒரு வறுமையான குடும்பத்தில் பிறந்தவன் தான். தினமும் கடலுக்குச் சென்று வலை இழுத்தவன் தான். அந்த வகையிலே ஒரு நாள் நான் கடலுக்குச் சென்று வரும்பொழுது அங்கு கூலியாக தந்த பத்து ரூபாயை எனது அம்மாவிடம் கொடுத்தேன். அவர் மறுகணமே அதனை கசக்கி என் முகத்தில் எறிந்து உன்னை அனுப்பியது கல்வி கற்கவே தவிர இந்த பணத்தை பெறுவதற்கு அல்ல என்று சொன்னார் .

அன்று எனது தாயார் இந்த பத்து ரூபாயை மன முகர்ந்து ஏற்று இருந்தால் இன்று நான் உங்கள் முன் நிலையில் பேசமுடியாதிருந்திருக்கும். உண்மையிலேயே அப்படிப்பட்டவர்கள் இருந்த காரணத்தினால் தான் இன்று நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். எனவே வறுமை ஒரு தடையல்ல. அந்த வகையிலே நீங்கள் பின்தங்கிய பிரதேசத்தில் வாழுகிறோம் என்று நீங்கள் கருதலாம். ஆனால் நீங்கள் தான் செல்வந்தர்கள். பின்தங்கிய என்று சொல்கின்ற இடங்களிலே அவர்கள் சந்தோஷமாகவும் ஆரோக்கியமாகவும் வாழ்கின்றார்கள். அதுதான் செல்வந்த நிலை என்றும் சொல்வார்கள். எல்லாமே மனங்களில் தான் இருக்கின்றது. நகர்ப்புறத்திலே படாடோபமாக வாழ்வார்கள். அவர்களது பிள்ளைகள் போதைகளிலும் ஒழுங்கீனமாகவும் நடப்பார்கள். இறுதியில் வாழ்க்கை சூனியமாக மாறுகிறது.ஆனால் இப்படிப்பட்ட கிராமப்புறங்களில் வாழ்கின்ற மக்கள் சந்தோஷமாக வாழ்கின்றார்கள். பிள்ளைகளும் ஆரோக்கியமாக வளர்கின்றது .எனவே நீங்கள் தரமான கல்வியை முன்னெடுக்க வேண்டும் என்று வாழ்த்துகின்றேன்-என்றார்.

இந்த வைபவத்தில் கபடி எல்லே போட்டியிலே சாம்பியனாக தெரிவு செய்யப்பட்ட மாணவிகள் அனைவருக்கும் பூமாலை சூட்டி கைலாகு கொடுத்து பாராட்டி கௌரவிக்கப்பட்டார்கள். அத்துடன் இம்முறை பாடசாலையில் இருந்து பல்கலைக்கழகம் செல்கின்ற மாணவர்களும் பாராட்டப்பட்டனர். (அ)

# இந்தியா, ஜேர்மன், ஜப்பான் நாடுகளுக்கு ஐ.நா. பாதுகாப்பு சபையில் நிரந்தர இடம்

## அமெரிக்கா முழு ஆதரவு

நியூயோர்க், செப். 24

ஐ.நா. பாதுகாப்பு சபையில் இந்தியா, ஜேர்மனி மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு நிரந்தர இடம் கிடைக்க அமெரிக்கா ஆதரவு தெரிவித்துள்ளது.

நியூயோர்க்கில் இடம்பெற்று வரும் ஐ.நா. பொதுச்சபை கூட்டத்தில் பேசிய அமெரிக்க ஜனாதிபதி பைடன், ஐ.நா. பாதுகாப்பு சபையில் இந்தியா, ஜேர்மனி மற்றும் ஜப்பானுக்கு நிரந்தர இடம் கிடைக்க செய்ய வேண்டும் என்று வலியுறுத்தினார்.

இன்றைய உலகின் தேவைகளுக்கு சிறப்பாக பதிலளிக்கும் வகையில், ஐ.நா. பாதுகாப்பு சபையில் இன்னும் கூடுதல் உறுப்பினர்களை உள்ளடக்குவதற்கான நேரம் வந்து விட்டது என்று நம்புகிறேன் என பைடன் குறிப்பிட்டார்.

இதேவேளை, ஜேர்மனி, ஜப்பான், இந்தியா ஆகிய நாடுகளை ஐ.நா. பாதுகாப்பு சபையில் நிரந்தர உறுப்பினர்களாக்க வேண்டும் என்ற கோரிக்கையை நாங்கள் வரலாற்று ரீதியாகவும், தொடர்ந்தும் ஆதரிக்கிறோம். அதே நேரத்தில் இதற்காக நிறைய விடயங்களைச் செய்ய வேண்டியுள்ளது என அமெரிக்க மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (அ)

# உகாண்டாவில் மீண்டும் எபோலா!

## 7பேருக்கு தொற்று உறுதி - ஒருவர் பலி!!



கம்பாலா, செப். 24

உகாண்டா இந்த வாரம் 7 பேருக்கு எபோலா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இவர்களில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

எபோலாவுக்கு இதுவரை தடுப்பூசி கண்டறியப்படாத நிலையில் புதிய தொற்று பரவல் கவலையை ஏற்படுத்தியுள்ளதாக உகாண்டா சுகாதார அமைச்சின் எபோலா விவகாரங்களுக்கான பிரிவு தலைவர் கியோப் ஹென்றி போபோசா நேற்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இதேவேளை, செப்டம்பர் தொடக்கத்திலேயே எபோலா பரவத் தொடங்கியதாகக் கருதப்படுவதால் நாட்டில் மேலும் பல உறுதிப்படுத்தப்படாத எபோலா தொற்றாளர்கள் இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

மத்திய உகாண்டாவில் உள்ள முபெண்டே மாவட்டத்தில் உள்ள ஒரு சிறிய கிராமத்தில் இருந்து தொற்று பரவத் தொடங்கியதாக ஹென்றி போபோசா கூறினார்.

அண்மைக் காலங்களில் இறந்த 7 பேர் எபோலா தொற்று அறிகுறிகளைக் கொண்டிருந்தனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

எனினும் அவர்களின் மாதிரிகள் பரிசோதனைக் கூடத்துக்கு அனுப்பப்பட்டு இதுவரை தொற்று உறுதி செய்யப்படாததால் அவை உத்தியோகபூர்வ இறப்பு எண்ணிக்கையுடன் சேர்க்கப்படவில்லை.

உகாண்டா கடைசியாக 2012 இல் எபோலா தொற்றை அறிவித்தது. அதன் பின்னர் மீண்டும் இப்போது தொற்று பரவல் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# ஹிஜாப் எதிர்ப்பு ஈரானில் தீவிரம்

## 31 பேர் பாதுகாப்பு படைகளால் சுட்டுக் கொலை



தெஹ்ரான், செப். 24

ஹிஜாப் சட்டங்களை மீறிய குற்றச்சாட்டில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்ட பெண் ஒருவர் உயிரிழந்த சம்பவத்தை அடுத்து, ஈரானில் ஹிஜாப் எதிர்ப்பு மற்றும் அரசுக்கு எதிரான போராட்டங்கள் தீவிரமடைந்துள்ளன.

இந்தப் போராட்டங்களில் ஈடுபட்டவர்கள் மீது பாதுகாப்பு படையினர் நடத்திய தாக்கு தல்களில் 31 பேர் கொல்லப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதையடுத்து ஹிஜாப் எதிர்ப்பு மற்றும் அரசுக்கு எதிரான பெண்களின் போராட்டங்கள் ஈரான் முழுவதும் தீவிரமடைந்து வருகிறது. அத்துடன், துருக்கி, கனடா போன்ற நாடுகளிலும் ஆதரவுப் போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

ஈரானில் ஹிஜாப் சட்டங்களை மீறிய குற்றச் சாட்டில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்ட மாஷா அமினி என்ற பெண் 3 நாட்கள் கோமாவில் இருந்த நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை உயிரிழந்தார்.

இதனையடுத்தே ஹிஜாப்களை தீயிட்டுக் கொளுத்தி பெண்கள் பெரும் போராட்டங்க ளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், ஈரானில் போராட்டக்காரர்களுக்கும், பாதுகாப்பு படையினருக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் இதுவரை 31 பேர் உயிரிழந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஈரானில் பெண்கள் தலையை ஹிஜாப் கொண்டு மறைக்க வேண்டும் எனவும் கைகள் மற்றும் கால்களை மறைக்க வேண்டும் என்றும் சட்டம் உள்ளது. இந்தச் சட்டத்தை மீறியதாக குற்றம் சாட்டப்பட்ட மாஷா அமினி என்ற பெண் கடந்த வாரம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட மாஷா அமினி, பொலி ஸாரால் சித்திரவதை செய்யப்பட்டதாகவும் அவரது தலையை ஒரு வாகனத்தின் மீது மோதியதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆனால் பொலிஸாரின் சித்திரவதையின் போது மாஷா அமினி உயிரிழந்ததாக கூறப்படுவதை பொலிஸார் மறுத்துள்ளனர்.

பொலிஸ் காவலில் மாஷா அமினிக்கு மார டைப்பு ஏற்பட்டதாகவும் அதனாலேயே அவர் இறந்ததாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

எனினும் அமினி கைது செய்யப்பட்ட போது அவர் மிகவும் ஆரோக்கியமாக இருந்ததாக குடும்பத்தினர் கூறுகின்றனர். (அ)

# வீட்டில் கையை உடைப்பது எப்படி?:

## ரஷ்ய இராணுவ அணிதிரட்டலில் இருந்து தப்பிக்க கூகிளில் தேடும் இளையவர்கள்!



மொஸ்கோ, செப். 24

ரஷ்யா தனது நிலப்பரப்பைப் பாதுகாக்க கிடைக்கக் கூடிய அனைத்து வழிகளையும் பயன்படுத்தும் என்று ஜனாதிபதி விளாடிமிர் புடின் புதன்கிழமை தெரிவித்தார். அத்துடன், 30 இலட்சம் மேலதிக படையினரை திரட்டுமாறும் உத்தரவிட்டுள்ளார்.

உக்ரைனுக்கு மட்டுமின்றி அதன் மேற்கத்திய ஆதரவாளர்களுக்கும் எதிரான போரில் வெற்றி பெற கூடுதல் மனிதவளம் தேவை என்று புடின் கூறினார்.

இந்த புதிய உத்தரவையடுத்து, ரஷ்யாவிலிருந்து இளையவர்கள்விரைவாக வெளியேறி வருவதாக மேற்கு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

ஒரு தொலைக்காட்சி உரையில், ரஷ்ய பாதுகாப்பு மந்திரி செர்ஜி ஷோய்கு, அண்டை நாடான உக்ரைனில் அதன் இராணுவ நடவடிக்கைக்கு ஆதரவாக 300,000 இட ஒதுக்கீட்டாளர்களை ரஷ்யா உருவாக்கும் என்று கூறினார். ரஷ்யாவில் 25 மில்லியன் கையிருப்பு படை உள்ளது என்று ரஷ்யாவின் பாதுகாப்பு மந்திரி கூறியதால் இது ஒரு பகுதி அழைப்பு என்பது குறிப்பிடத்தக்கது.

புடினின் இந்த நடவடிக்கை மேற்கு நாடுகளால் "விரக்தியின் செயல்" என்று முத்திரை குத்தப்பட்டது. ஐ.நா பொதுச் சபையில் கலந்து கொண்ட, ஜேர்மன் சான்ஸ்லர் ஓலாஃப் ஸ்கோல்ஸ், உக்ரைனில் ரஷ்யாவால் "இந்த குற்றவியல் போரை வெல்ல முடியாது" என்றும் புடின் "அவரது சமீபத்திய முடிவு எல்லாவற்றையும் மோசமாக்குகிறது" என்றும் குறிப்பிட்டார்.

இந்த அறிவிப்பு வெளியானதிலிருந்து, ரஷ்யாவில் உள்ள சாதாரண மக்களை இது எவ்வாறு பாதித்தது என்பது குறித்து பல அறிக்கைகள் வந்துள்ளன.

ரஷ்யாவிலிருந்து வெளியேறும் விமானங்கள் அனைத்தினதும் ரிக்கெட்கள் விற்றுத் தீர்ந்தன

நாட்டைவிட்டு வெளியேறும் ஒரு வழி விமான ரிக்கெட்களின் விலை உயர்ந்து வேகமாக விற்றுத் தீர்ந்தன. கூகுள் ட்ரெண்ட்ஸ் தரவு மொஸ்கோவிலிருந்து நேரடி விமானங்களுக்கான தேவை அதிகரிப்பதைக் காட்டுகிறது. ரஷ்யாவின் மிகவும் பிரபலமான விமான முன்பதிவு தளமான யுளயைளயடநள க்கான தேடல்களில் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

மொஸ்கோவிலிருந்து துருக்கியின் இஸ்தான்புல் மற்றும் ஆர்மீனியாவில் உள்ள யெரெவனுக்கான நேரடி விமானங்களின் ரிக்கெட்கள் புதன்கிழமை விற்றுத் தீர்ந்துவிட்டதாக Aviasales தரவு காட்டுகிறது. குறிப்பிடத்தக்க வகையில், இரண்டு இடங்களும் ரஷ்யர்கள் விசா இல்லாமல் நுழைய அனுமதிக்கின்றன.

புடின் பகுதி அணிதிரட்டலை அறிவித்த பிறகு "வீட்டில் ஒரு கையை எப்படி உடைப்பது" என்பதற்கான கூகுள் தேடல்கள் அதிகரித்ததாக நியூஸ் வீக் தெரிவித்துள்ளது.

ரஷ்யர்களும் கூகுளில் "திரள்வதைத் தவிர்ப்பது மற்றும் உயிருடன் இருப்பது" என்று தேடுகிறார்கள்.

உக்ரைனின் பாதுகாப்பு அமைச்சகம் ஒரு ட்வீட்டில், "இன்னும் நேரம் இருக்கும் போது மொலோடோவ் காக்டெய்ல் தயாரிப்பதற்கான வழிமுறைகளை கூகுள் செய்தால் நன்றாக இருந்திருக்கும்" என்று கூறியது.

ரஷ்யா-பின்லாந்து எல்லையில் போக்குவரத்து அதிகரித்துள்ளது

இந்த அறிவிப்புக்குப் பிறகு, ரஷ்யாவுடனான கிழக்கு ஃபின்லாந்து எல்லையில் புதன்கிழமை ஒரே இரவில் போக்குவரத்து அதிகரித்தது. பின்னிஷ் எல்லைக் காவலர் ஒரு ட்வீட்டில், வியாழன் காலையிலும் நடவடிக்கையின் எழுச்சி தொடர்ந்தது. ரஷ்யாவில் உள்ள மக்கள் நாட்டை விட்டு வெளியேற முயற்சிப்பதை இது தெளிவாகக் காட்டுகிறது. (அ)

# இங்கிலாந்தை 10 விக்கெட்களால் வெற்றி கொண்டது பாகிஸ்தான்!



கராச்சி, செப் 24

இங்கிலாந்துக்கு எதிராக கராச்சியில் நேற்று முன்தினம் நடைபெற்ற 2ஆவது சர்வதேச இருபது - 20 கிரிக்கெட் போட்டியில் 10 விக்கெட்களால் அமோக வெற்றியீட்டி பதிலடி கொடுத்தது பாகிஸ்தான்.

இந்தப் போட்டி முடிவை அடுத்து 7 போட்டிகள் கொண்ட சர்வதேச இருபது - 20 கிரிக்கெட் தொடர் 1 - 1 என சமநிலையாகியுள்ளது.

பாகிஸ்தான் அணித் தலைவர் பாபர் அஸாம் குவித்த அபார சதமும் முஹமட் ரிஸ்வான் பெற்ற அரைச்சதமும் பாகிஸ்தானின் வெற்றியில் பெரும் செல்வாக்கு செலுத்தின.

இங்கிலாந்து நிர்ணயித்த 200 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் 19.3 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 203 ஓட்டங்களைக் குவித்து அமோக வெற்றியீட்டியது.

பாபர் அஸாம் 66 பந்துகளை எதிர்கொண்டு 11 பௌண்ட்ரிகள், 5 சிக்ஸர்களை விளாசி 110 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார். இது அவர் குவித்த 2ஆவது சர்வதேச இருபது - 20 கிரிக்கெட் சதமாகும்.

மறுபக்கத்தில் ரிஸ்வான் 51 பந்துகளில் 5 பௌண்ட்ரிகள், 4 சிக்ஸர்கள் அடங்கலாக ஆட்டமிழக்காமல் 88 ஓட்டங்களைக் குவித்தார். இது அவர் கடந்த 3 இனிங்ஸ்களில் குவித்த 3ஆவது தொடர்ச்சியான அரைச்சதம் என்பதுடன் 64 சர்வதேச இருபது - 20 போட்டிகளில் அவர் பெற்ற 18ஆவது அரைச்சதமாகும்.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்களை இழந்த, அந்த அணி 199 ஓட்டங்களைக் குவித்தது.

அணித் தலைவர் மொயின் அலி குவித்த அரைச் சதம், பில் சோல்ட், அலெக்ஸ் ஹேல்ஸ், பென் டக்கெட், ஹெரி ப்றூக் ஆகியோரின் அதிரடி துடுப்பாட்டங்கள் என்பன இங்கிலாந்தின் மொத்த எண்ணிக்கைக்கு வலு சேர்த்தது.

பில் சோல்ட், அலெக்ஸ் ஹேல்ஸ் ஆகிய இருவரும் 31 பந்துகளில் 42 ஓட்டங்களைப் பகிர்ந்து சிறந்த ஆரம்பத்தை ஏற்படுத்தினார்.

ஹேல்ஸ் 21 பந்துகளில் 26 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்த அடுத்த பந்தில் டேவிட் மார்லனும் வீரர்கள் அறைக்கு திரும்பினார். பில் சோல்ட்டும் பென் டக்கெட்டும் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி 3ஆவது விக்கெட்டில் 53 ஓட்டங்களைப் பகிர்ந்திருந்தபோது சோல்ட் 30 ஓட்டங்களுடன் களம் விட்ட கன்றார். (95 - 3 விக்.) மொத்த எண்ணிக்கை 101 ஓட்டங்களாக இருந்தபோது பென் டக்கெட் 43 ஓட்டங்களுடன் வெளியேறினார். எனினும் ஹெரி ப்றூக், மொயீன் அலி ஆகிய இருவரும் 5ஆவது விக்கெட்டில் 27 பந்துகளில் 59 ஓட்டங்களைப் பகிர்ந்து இங்கிலாந்து அணிக்கு வலுவை ஏற்படுத்தினார்.

ஹெரி ப்றூக் 19 பந்துகளில் 3 சிக்ஸர்கள், ஒரு பௌண்ட்ரியுடன் 31 ஓட்டங்களைப் பெற்றார். தொடர்ந்து மொயின் அலியும் சாம் கரனும் பிரிக்கப்படாத 6ஆவது விக்கெட்டுக்காக 18 பந்துகளில் 39 ஓட்டங்களைப் பகிர்ந்தனர்.

மொயின் அலி 23 பந்துகளில் 4 பௌண்ட்ரிகள், 4 சிக்ஸர்கள் அடங்கலாக ஆட்டமிழக்காமல் 55 ஓட்டங்களைக் குவித்தார். சாம் கரன் 10 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார்.

பாகிஸ்தான் அணியின் பந்துவீச்சில் ஹாரிஸ் ரவூப், ஷாநவாஸ் தஹானி தலா 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

(ஐ)



# இங்கிலாந்துடனான தொடர் இந்தியா வசம்!

## 23 ஆண்டுகளின் பின் சாதித்தது

லண்டன், செப். 24

இங்கிலாந்து மகளிர் அணிக்கு எதிரான 2ஆவது ஒருநாள் போட்டியில் 88 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற இந்திய மகளிர் அணி, தொடரைக் கைப்பற்றியிருக்கிறது. கடந்த 1999-க்குப் பிறகு அந்நாட்டில் கிரிக்கெட் தொடர் ஒன்றை இந்திய அணி கைப்பற்றியது இதுவே முதல் முறையாகும்.

புதன்கிழமை நள்ளிரவு நிறைவடைந்த இந்தப் போட்டியில் முதலில் இந்தியா 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 333 ஓட்டங்கள் விளாசியது. அடுத்து இங்கிலாந்து 245 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்தது. இந்திய அணித் தலைவி ஹர்மன்பிரீத் கௌர் ஆட்டநாயகி ஆனார்.

அதிரடியாக ஆடிய அவர், சதம் கடந்து இறுதி வரை ஆட்டமிழக்காமல் இருந்தார். கடைசி 3 ஓவர்களில் இந்தியா 62 ஓட்டங்கள் சேர்க்க, அதில் ஹர்மன்பிரீத் கடைசி 11 பந்துகளில் 43 ஓட்டங்கள் விளாசியிருந்தார்.

பந்துவீச்சில் ரேணுகா சிங் இங்கிலாந்தின் துடுப்பாட்ட வரிசையை சரித்தார்.

முன்னதாக நாணயச் சுழற்சியல் வென்ற இங்கிலாந்து களத்தடுப்பைத் தெரிவு செய்தது. இந்திய இனிங்ஸை தொடங்கியோரில் ஷஃபாலி வர்மா 8 ஓட்டங்களுக்கும், ஸ்மிருதி மந்தனா 4 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 40 ஓட்டங்களுக்கும் ஆட்டமிழந்தனர். யஸ்திகா பாட்டியா 4 பௌண்ட்ரிகளுடன் 24 ஓட்டங்கள் சேர்த்தார்.

மத்திய வரிசையில் இணைந்த ஹர்மன்பிரீத் கௌர்- ஹர்லீன் தியோல் கூட்டணி, 4-ஆவது விக்கெட்டுக்கு 112 ஓட்டங்கள் சேர்த்து அசத்தியது.

இதில் தியோல் 5 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களுடன் 58 ஓட்டங்களுக்கு வெளியேற்றப்பட்டார். பூஜா வஸ்த்ரகர் கடைசி விக்கெட்டாக 18 ஓட்டங்களுக்கு பெவிலியன் திரும்பினார். ஓவர்கள் முடிவில் ஹர்மன்பிரீத் 111 பந்துகளில் 18 பௌண்ட்ரிகள், 4 சிக்ஸர்கள் உள்பட 143, தீப்தி சர்மா 15 ஓட்டங்களுக்கு ஆட்டமிழக்காமல் இருந்தனர். இங்கிலாந்து பந்துவீச்சில் லௌரென் பெல், கேட் கிராஸ், பிரியா கெம்ப், சார்லி டீன், சோபி எக்லஸ்டன் ஆகியோர் தலா 1 விக்கெட் எடுத்திருந்தனர்.

பின்னர் இங்கிலாந்து இன்னிங்ஸில் அதிகபட்சமாக, மத்திய வரிசையில் ஆடிய டேனி வியாட் 6 பௌண்ட்ரிகளுடன் 65 ஓட்டங்கள் சேர்க்க, அலிஸ் கேப்சி 6 பெண்ட்ரிகளுடன் 39, அணித் தலைவி எமி ஜோன்ஸ் 3 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 39, சார்லி டீன் 3 பௌண்ட்ரிகளுடன் 37 ஓட்டங்கள் அடித்தனர்.

டேமி பியூமௌன்ட் 6, எம்மா லேம்ப் 15, சோபி டங்க்லி 1, பிரியா கெம்ப் 12, சோபி எக்லஸ்டன் 1, கேட் கிராஸ் 14 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தனர். இறுதியாக லௌரென் பெல் மட்டும் 11 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இந்திய பந்துவீச்சில் ரேணுகா சிங் 4, தயாளன் ஹேமலதா 2, தீப்தி சர்மா, ஷபாலி வர்மா ஆகியோர் தலா ஒரு விக்கெட் சாய்த்தனர்

# பழைய பாணிக்கு திரும்புகிறது ஐ. பி. எல்.

புதுடில்லி, செப். 24




அடுத்த ஆண்டு ஐ. பி. எல். போட்டியில் பழைய பாணியில் அணிகள் யாவும் தங்களின் சொந்த மண்ணிலும் எதிரணியின் மண்ணிலும் என இரு இடங்களில் ஆடும் முறை மீண்டும் கொண்டுவரப்படுகிறது.

இதனை, இந்திய கிரிக்கெட் சபையின் தலைவர் சௌரவ் கங்குலி, மாநில கிரிக்கெட் சங்கத் தலைவர்களிடம் உறுதிப்படுத்தியிருக்கிறார். முன்னதாக, கொரோனா பரவல் காரணமாக 2020, 2021 தொடர்கள் யாவும் குறிப்பிட்ட இடங்களில் மட்டுமே நடத்தப்பட்டன.

2020 தொடர், ஐக்கிய அரபு இராச்சியத்தில் ரசிகர்கள் இன்றி டுபாய், சார்ஜா, அபுதாபியில் நடைபெற்றது. அடுத்து 2021-இல் டில்லி, அகமதாபாத், மும்பை, சென்னையில் ஆட்டங்கள் நடைபெற்றன.

இந்நிலையில், கொரோனா பரவல் கட்டுப்பட்டிருப்பதால் எதிர்வரும் 2023 ஐ. பி. எல். போட்டியில் அணிகள் யாவும் பழைய முறையிலேயே தங்களின் சொந்த மண்ணிலும், அந்நிய மண்ணிலும் என இரு இடங்களில் ஆட இருக்கின்றன.

# அஸாம் - ரிஸ்வான் இணை துரத்தியடிப்பதில் சாதனை!

கராச்சி, செப். 24

துரத்தியடித்து வெற்றி பெறுவதில் பாகிஸ்தான் அணி புதிய சாதனை படைத்துள்ளது.

இங்கிலாந்து அணிக்கு எதிராக நேற்று முன்தினம் நடந்த போட்டியில் 200 ஓட்டங்கள் என்ற இலக்கை விக்கெட் இழப்பின்றி துரத்திப் பிடித்தது பாகிஸ்தான் அணி.

இந்தப் போட்டியில் தொடக்க வீரர்களாகக் களமிறங்கிய பாபர் அஸாம் 110 ஓட்டங்களும், முஹமது ரிஸ்வான் 88 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தனர். அவர்கள் முதல் விக்கெட்டுக்கு 203 ஓட்டங்களை குவித்தனர். இதன் மூலம் பாபர் அஸாம் - முஹமது ரிஸ்வான் இணை புதிய உலக சாதனை படைத்தது.

20 ஓவர் கிரிக்கெட் துரத்தியடிப்பதில் தொடக்க இணைப்பாட்டமாக அதிக ஓட்டங்களை எடுத்த இணை என்ற சாதனையை படைத்தனர். இதற்கு முன்பு இவர்கள் கடந்த ஆண்டு தென்னாபிரிக்காவுக்கு எதிராக துரத்தி வென்றபோது 197 ஓட்டங்கள் குவித்ததே ஒரு தொடக்க இணையின் அதிக ஓட்டங்களாக இருந்தது. அந்த சாதனையை அவர்களே முறியடித்தனர்.

(ஐ)





## ‘குறுக்கு வேலி’ கவிதை நூல் வெளியீடு

நிந்தவூர், செப். 24

மருதமுனை ஜெஸீமா முஜீப் எழுதிய ‘குறுக்கு வேலி’ கவிதை நூல் வெளியீட்டு விழா பிரபல எழுத்தாளரும் இலக்கிய விமர்சகருமான ஜெஸ்மி எம். மூஸா தலைமையில் கலாசார மண்டபத்தில் நடந்தேறியது.

அக்கரைப்பற்று மாவட்ட மற்றும் நீதிவான் நீதிமன்ற நீதிபதி எம்.எச்.எம். ஹம்ஸா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

தென்கிழக்குப் பல்கலைக் கழக சமூகவியல் துறை தலைவர்-பேராசிரியர் எஸ்.எம். ஐயூப், கல்முனை வலயக் கல்வி அலுவலக தமிழ்ப் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி சத்தார் எம்.பிர் தௌஸ் ஆகியோர் நூல் மீதான உரையாற்றினர்.

வரவேற்புரையினை சமுர்த்தி உத்தியோகத்தர் ஏ. பீ.எம்.நவாஸ் நிகழ்த்தியதுடன் அறிப்பாளரும் நாவிதன் வெளி பிரதேச செயலக கலாசார உத்தியாகத்தருமான ஏ.எல். எம்.சினாஸ் நெறிப்படுத்தினர்.

கிழக்கு மாகாண வீதி அபி விருத்தி அமைச்சின் செயலாளர் ஏ.எச்.எம்.அன்சார், கல் முனை பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலி, பெரிய நீலாவணை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜெயலால் உட்பட பலரும் அதிதி களாகக் கலந்து கொண்டனர்.

(அ-06)




## புதுநகர் பாடசாலை முப்பெரும் விழா

அம்பாறை, செப். 24

சம்மாந்துறை கல்வி வலயத்தின் புதுநகர் பாடசாலை முப்பெரும் விழா பாடசாலை அதிபர் எஸ். சிவயோகராஜா தலைமையில் பாடசாலை கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

இவ்விழாவுக்கு பிரதம அதிதியாக சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எம். எம். அமீர் கலந்துகொண்டதோடு, கௌரவ அதிதியாக கோட்டக்கல்வி அதிகாரி எம்.ஏ. சபூர்தம்பி, விசேட அதிதிகளாக இளம் விஞ்ஞானி எஸ். வினோஜ்குமார், புஸ்பா பவுன்டேசன் பணிப்பாளர் எஸ்.இராசையா, பிரதி அதிபர் ஏ.எல். சர்ஜூன் உட்பட ஆலயத் தலைவர்கள் மற்றும் ஊர் மக்களும் கலந்துகொண்டனர்.

அங்கு விசேட அதிதியாக கலந்து கொண்ட எஸ் வினோஜ்குமார் கருத்து தெரிவிக்கையில் “ பாடசாலை படிக்கும் மாணவர்களுக்கு பாடசாலை தோட்டங்கள் மற்றும் வீட்டுத் தோட்டங்கள் அமைப்பதற்கு அருகில் உள்ள ஆலயங்கள், தொண்டு நிறுவனங்கள் மற்றும் நலன்புரி ஆர்வலர்கள் உதவிகளையும் ஆலோசனைகளையும் வழங்க வேண்டும்.

தற்காலத்தில் தொலைபேசிப் பாவனை, கோவிட்19 மற்றும் பொருளாதார வீழ்ச்சியினால் மன அழுத்தத்தில் பல மாணவர்கள் உள்ளார்கள். அதற்கு சிறந்த மருந்தாக வீட்டுத்தோட்டம் மற்றும் பாடசாலை தோட்டங்கள் அமையும். மேலும் மாணவர்களுக்கு முயற்சியாண்மை சார்ந்த மேலதிக விடயங்களையும் ஆசிரியர்கள் வழங்கவேண்டும். இதனால் எதிர்காலத்தில் படித்து விட்டு தொழிலை தேடுபவர்களாக அல்லாமல் தொழில் வாய்ப்புக்களை உருவாக்குபவர்களாக மாணவர்கள் உருவாகுவார்கள்-என்றார்.

இவ்விழாவில் கடந்த 2020 மற்றும் 2021ஆம் ஆண்டுகளில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

(அ)

# பொத்துவில் ஆதார வைத்தியசாலையில் மாதிரி உணவகம் திறப்பும், மரநடுகையும்

அம்பாறை, செப். 24

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் நோயாளிகளுக்கும் சுகாதார உத்தியோகத்தர்களுக்கும் மக்களுக்கும் தரமான சுகாதாரமான மலிவான தொற்றா நோயை தவிர்க்கும் விதமான உணவகம் கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் டீ. ஜீ. மலின்டன் கொஷ்டா மற்றும் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஐ.எல்.எம்.றிபாஸ், பொத்துவில் பிரதேச சபை தவிசாளர் மற்றும் பிரதேச செயலாளர் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் நேற்று முன் தினம் திறந்து வைக்கப்பட்டது



பொத்துவில் ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் மருத்துவர் டீ. ஆர்.எஸ்.டீ. ரஜாப் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மரநடுகையும் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களை கௌரவிக்கும் நிகழ்வும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளர் மருத்துவர் எம்.பி. அப்துல் வாஜித் மற்றும் பணிமனையின் பிரிவுத் தலைவர்கள் பொத்துவில் ஆதார வைத்தியசாலையின் வைத்தியர்கள் உத்தியோகத்தர்கள் அபிவிருத்திக் குழுவினர் உள்ளிட்ட பெருந்திரளான பங்குபற்றுனர்கள் கலந்துகொண்டனர்.

(அ)

# நெல் செய்கை காணிகளை மீளவும் வழங்க நடவடிக்கை

அம்பாறை, செப். 24

அம்பாறை மாவட்டத்தில் ஆக்கிரமிக்கப்பட்ட நெற்செய்கை காணிகளை மீள காணி உரிமையாளர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முஷாரப் தெரிவித்தார்.

மிக நீண்டகாலமாக குறித்த காணிகளை பராமரித்து வரும் சட்டரீதியிலான காணி உரிமத்தைக் கொண்டுள்ள ஏழை விவசாயிகளின் காணிகளை வனஜீவராசிகள், வன இலாகா திணைக்களங்கள் சுவீகரித்து, அது வர்த்தமானி ஊடாக அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இக்காணிகளை விடுவிப்பது தொடர்பாக வனசீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சர் மஹிந்த அமரவீர மற்றும் வன இலாகா, வனஜீவராசிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஆகியோருடன் காணி விடுவிப்பு தொடர்பான இறுதிக் கட்ட நடைபெற்றது.

இந்தப் பேச்சுவார்த்தையில் சுவீகரிக்கப்பட்டு, வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ள காணிகளை உரிய விவசாயிகளுக்கு வழங்குவதற்கு அமைச்சர் மஹிந்த அமரவீர வாக்குறுதியளித்துள்ளார்.

2010, 2016 ஆகிய காலப் பகுதியில் வன இலாகா மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களம் நெற்செய்கை காணிகளை சுவீரித்து வர்த்தமானி வெளியிடப்பட்டிருந்தது.

மூன்று தசாப்த கோரிக்கையாக இருந்து வரும் இக்காணிகளை விடுவித்து உடனடியாக காணி உரிமையாளர்களிடம் கையளிக்கவேண்டுமென கோரிக்கை விடுத்திருந்ததாக தெரிவித்தார்.

(அ)

## கல்லடி கடற்கரையில் ஆண் சடலமாக மீட்பு

மட்டக்களப்பு, செப். 24

மட்டக்களப்பு - காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள கல்லடி கடற்கரையில் உயிரிழந்த நிலையில் ஆண் ஒருவர் நேற்று முன் தினம் இரவு சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

நாவற்குடாவைச் சேர்ந்த 45 வயதுடைய பாக்கியரெட்ணம் ரஜேந்திரன் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மீனவர்கள் பொலிஸாருக்கு தெரிவித்ததை அடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் சடலத்தை மீட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

(அ)



## காத்தான்குடி ஹோட்டல்களில் திடீர் சோதனை நடவடிக்கை

மட்டக்களப்பு, செப். 24

காத்தான்குடியில் உணவுத் தயாரிப்பில் ஈடுபடும் ஹோட்டல்கள், சிற்றுண்டிச்சாலைகள், பேக்கரிகள் மற்றும் உணவு தயாரிக்கும் இடங்கள், நேற்று முன்தினம் திடீர் சோதனைகள் செய்யப்பட்டன.

இதன்போது, மனித பாவனைக்குதவாத உணவுகள் காணப்பட்ட சில ஹோட்டல்களின் உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு, அவைகளைச் சீர் செய்வதற்காக கால அவகாசமும் வழங்கப்பட்டது.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் சுகுணன் தலைமையில், அவரது வழிகாட்டலில் இந்தச் சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதில் சுகாதார வைத்திய அதிகாரிகள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் சுகாதார அதிகாரிகள் என 60 உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

உணவுப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் இந்த சோதனை நடவடிக்கை மாவட்டம் முழுவதும் மேற்கொள்ள நடவடிக்கை எடுகப்பட்டுள்ளதுடன், அதில் ஒரு கட்டமாக காத்தான்குடி சுகாதார அலுவலகப் பிரிவிலுள்ள உணவு தயாரிப்பில் ஈடுபடும் இடங்கள் சோதனை செய்யப்பட்டதாக மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சுகுணன் தெரிவித்தார்.

(அ)

## இலங்கைக்கு...

"இலங்கையில் நல்லிணக்கம் பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை ஊக்குவித்தல்", என்ற தலைப்பில் 'கோர்' நாடுகள் எனப்படும் பிரித்தானியா, கனடா, ஜேர்மனி, மலாவி, மொன்டினீக்ரோ, வடக்கு மசிடோனியா ஆகிய நாடுகள் தயாரித்த பூச்சிய வரைவு புதன்கிழமை மனித உரிமைகள் பேரவையிடம் கையளிக்கப்பட்டது.

அந்த அறிக்கையின்படி, மனித உரிமைகள் தொடர்பான பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு இலங்கை அரசாங்கத்துக்கு அதிக கால அவகாசம் வழங்கப்படுகிறது.

மனித உரிமைகள் பேரவையின் 53, 55ஆவது அமர்வுகளில் வாய்மொழி புதுப்பிப்புக்களையும், 54ஆவது அமர்வில் எழுத்துபூர்வமான புதுப்பிப்பு மற்றும் பொறுப்புக்கூறலை முன்னெடுப்பதற்கான தெரிவுகள் உள்ளடங்கிய விரிவான அறிக்கையை சமர்ப்பிக்குமாறும் ஆணையாளரிடம் கேட்கப்படுகிறது. 2024ஆம் ஆண்டு நடக்கும் 57ஆவது அமர்வு இந்த இரு அறிக்கைகளின் ஊடாடும் உரையாடலின் பின்னணியில் விவாதிக்கப்படும்.

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண இலங்கை அரசாங்கம் எடுத்துள்ள சமீபத்தைய முயற்சிகள் அங்கீகரிக்கப்படுகின்றன. சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தை வரவேற்கப்படுகிறது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, தேர்தல்கள் ஆணைக்குழு, தேசிய பொலிஸ் ஆணைக்குழு, நீதி சேவை ஆணைக்குழு மற்றும் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழு போன்ற முக்கிய ஆணைக்குழுக்களின் - நிறுவனங்களின் சுதந்திரத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் அதேவேளையில், அரசமைப்புச் சீர்திருத்தங்களுக்கான அரசாங்கத்தின் உறுதிப்பாட்டையும் தீர்மானம் அங்கீகரிக்கிறது. நல்லிணக்கம், அனைத்து மக்களும் மனித உரிமைகளை முழுமையாக அனுபவித்தல், ஒருங்கிணைந்த அதிகாரப் பகிர்வு தொடர்பான தனது உறுதிமொழிகளை நிறைவேற்றுமாறு இலங்கை அரசாங்கத்தை வரைவு கேட்கிறது.

அண்மையில், அமைதியான போராட்டக்காரர்களுக்கு எதிரான வன்முறை, கைதுகள் இதேபோன்று, அரசாங்க ஆதரவாளர்களுக்கு எதிரான வன்முறை, இறப்பு, காயங்கள், அழிவு மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளுக்கு சேதம் விளைவித்தல் உள்ளிட்டவை தொடர்பில் கவலை தெரிவிக்கிறது. அத்துடன், அனைத்து தாக்குதல்கள் மற்றும் பொறுப்பு கூறப்பட்டவர்கள்மீது சுயாதீன விசாரணைகள் நடத்தப்படுவதன் முக்கியத்துவமும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறலில் முன்னேற்றம், பொருளாதார நெருக்கடி, ஊழலின் மனித உரிமைகள்மீதான தாக்கம் உட்பட இலங்கையின் மனித உரிமைகளின் நிலைமையை கண்காணித்து அறிக்கையிடுவதை மேம்படுத்துமாறு மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் பணிமனையை வரைவு கேட்டுள்ளது. (ஐ)

## வாக்குறுதிகளை...

சன் ஆகியோர் பங்கேற்றனர். பாராளுமன்ற அமர்வின் இடையில் இடம்பெற்ற சந்திப்பு என்பதால், நேற்றைய தினம் அமர்வில் பங்கேற்காத ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்கவில்லை.

சந்திப்பில், தேசிய பேரவையில் இணையுமாறு தமிழ் எம். பிக்களை பிரதமர் கேட்டுக் கொண்டார்.

அவருக்கு பதிலளித்த தமிழ் எம். பிக்கள், தமிழ் மக்களின் பிரச்னைகளை தீர்ப்பது தொடர்பில் - அரசியல் கைதிகள் விடுதலை, கல்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்கு கணக்காளர் நியமனம், குருந்தூர்மலை விவகாரம் என்பவற்றுக்கு தீர்வு காண உங்கள் அரசாங்கம் உறுதியளித்தது. ஆனால், அவற்றை செய்யவில்லை. மாறாக திருக்கோணேஸ்வரம் ஆக்கிரமிப்பு என்று புதிய பிரச்னைகளை உருவாக்குகிறீர்கள்.

இந்த நேரத்தில், நாம் தேசிய பேரவையில் இருந்தால் எமது மக்களுக்கு பதில்கூற முடியாது. இதில் இருக்கும் நியாயங்களை - வாக்குறுதிகளை நிறைவேற்றுங்கள். அதன் பின்னர் தேசிய பேரவையில் அங்கம் வகிப்பது குறித்து நாம் சிந்திக்கிறோம் என்று கூறினார்.

இதற்கு பதிலளித்த பிரதமர் கூடிய விரைவில் பிரச்னைகளுக்கு தீர்வு தருகிறோம் என்று கூறினார்.

அவ்வாறு தீர்வு கிடைத்த பின்னர் தேசிய பேரவையில் இணைவது குறித்து பரிசீலிப்பதாக மீண்டும் தமிழ் எம். பிக்கள் வலியுறுத்தினர். (ஐ)

## பிரான்ஸில்...

உயிரிழந்த நிலையில் காணப்பட்டார்.

இந்தச் சம்பவம் கடந்த புதன்கிழமை நள்ளிரவு லா கொர்னேவ் நகரில் இடம்பெற்றுள்ளது.

இந்த இருவர் மீதும் ஆறு பேர் கொண்ட குழு தாக்குதலை நடத்தியதுடன் அவர்களை கத்தியால் வெட்டியுள்ளது என்று பொலிஸ் விசாரணையில் தெரிய வந்தது.

சம்பவ இடத்துக்கு பொலிஸார் விரைந்த நிலையில், தாக்குதல் நடத்திய குழு தப்பிச் சென்றுள்ளது. தாக்குதலுக்கு இலக்கான 23 வயது இளைஞர் உயிரிழந்தார். மற்றைய நபர் உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

தாக்குதல் சம்பவம் குறித்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## வல்லிபுர...

இந்தப் பெருந்திருவிழாவில் எதிர்வரும் 30ஆம் திகதி வரை சுவாமி உள்வீதி வலம்வருவார். ஒக்ரோபர் முதலாம் திகதி முதல் குருக்கட்டு விநாயகர் ஆலய தரிசனத்தின் பின்னர் வரும், அனைத்துத் திருவிழாக்களின் போது சுவாமி வெளிவீதி உலா வருவார்.

முக்கிய திருவிழாக்களான வெண்ணெய் திருவிழா 2ஆம் திகதியும், துகில் திருவிழா 3ஆம் திகதியும், பாம்பு திருவிழா 4ஆம் திகதியும், கம்சன் போர்த் திருவிழா 5ஆம் திகதியும், வேட்டை திருவிழா 6ஆம் திகதியும், சப்பை ரதத் திருவிழா 7ஆம் திகதியும், தேர்த் திருவிழா 8ம் திகதியும், சமுத்திர தீர்த்தத் திருவிழா 9 ஆம் திகதியும், கேணி தீர்த்தமும், கொடி இறக்கமும் 10ஆம் திகதியும் இடம்பெறவுள்ளன. (ஐ-2)

## தேசிய...

பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், சபை முதல்வர், ஆளும் கட்சி பிரதம கொறடா ஆகியோர் செயல்படுவர் என்று கடந்த 20 ஆம் திகதி அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில், 35 பேர் கொண்ட உறுப்பினர்களில் நேற்று அறிவிக்கப்பட்டவர்களின் விவரம் வருமாறு,

அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா, நஸீம் அகமட், டிரான் அலஸ், இராஜாங்க அமைச்சர்களான சிவநேசதுரை சந்திரகாந்தன், சிசிர ஜயகொடி, பாராளுமன்ற உறுப்பினர்களான க. வி. விக்னேஸ்வரன், ஜீ. ஜீ. பொன்னம்பலம், மனோ கணேசன், நாமல் ராஜபக்ஷ ஜீவன் தொண்டமான், பழனி திகாம்பரம், ரவூப் ஹக்கீம், ரிஷாத் பதியுதீன், ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, பவித்ராதேவி வன்னியாரச்சி, வஜிர அபேவர்த்தன, ஏ. எல். எம்.அதாவுல்லா, திஸ்ஸ விதாரண,விமல் வீரவன்ஸ, வாசுதேவ நாணயக்கார, உதய கம்மன்பில, ரோஹித அபே குணவர்த்தன, அத்துரலியே ரத்ன தேரர், அசங்க நவரத்ன, அலிசப்ரி ரஹீம், வீரசுமண வீரசேகர மற்றும் சாகர காரியவசம் ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர்.

## காணாமல்...

ரின் அறிக்கை மீதான இடையீட்டு விவாதத்தில் தமிழ்உலகம் தன்னார்வ அமைப்பின் சார்பில் மெய்நிகர் மூலமாக கடந்த 19ஆம் திகதி நடந்த அமர்வில் செ. கஜேந்திரன் எம். பி. பங்கேற்றார். இதன்போதே, அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "அபிவிருத்திக் கொள்கைகளின் விளைவுகளில் ஆழமான பகுக்கப்பட்ட தரவுகளை சேகரிப்பதன் முக்கியத்துவத்தை அங்கீகரித்த சிறப்பு அறிக்கையாளருக்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறோம்.

தமிழர் என்ற அடையாளத்தின் காரணமாக தமிழ் முதியோர்கள் நீதி, சுகாதாரம், வீடுகள் போன்றவற்றைப் பெறுவது போன்ற விடயங்களில் பாகுபாடுகளைத் தொடர்ந்து எதிர்கொள்கின்றனர். தமிழர்கள் கடந்த 74 ஆண்டுகளாக கட்டமைப்பு ரீதியான இனப்படுகொலையால் பாதிக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக, ஒக்ரோபர் 2008 முதல் மே 2009 வரை, ஒரு இலட்சத்து 47 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் இலங்கையின் ஆக்கிரமிப்புப் படைகளால் கொல்லப்பட்டனர் அல்லது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டிருக்கின்றனர்.

குறிப்பாக, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பெற்றோர்கள் இலங்கை ஆக்கிரமிப்புப் படையினரால் தொடர்ச்சியாக துன்புறுத்தப்படுகின்றனர். அவர்களின் மனித உரிமைகள் மீறப்படுகின்றன. வறுமையின் சுழற்சியில் இவர்கள் தக்க வைக்கப்படுகிறார்கள். இது இவர்களுக்கு எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்துகின்றன.

மேலும், ஐ. நாவால் வகுக்கப்பட்ட நிலையான அபிவிருத்தி இலக்குகளை தமிழர்கள் எட்ட முடியாதவாறு செயல் திட்டங்களில் இருந்து விலக்கி வைக்கப்பட்டுள்ளனர். எனவே, இலங்கையை சர்வதேச நீதிமன்றத்துக்கு பாரப்படுத்தும்படி பரிந்துரைக்குமாறு சிறப்பு அறிக்கையாளரை வலியுறுத்துகின்றோம் - என்றார். (ஐ)

## கல்முனை...

களை சந்தித்து தேசிய பேரவையில் இணையுமாறு அழைப்பு விடுத்தார்.

இதற்கு, அரசாங்கம் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் என்று தமிழ் எம். பிக்கள் கோரியிருந்தனர்.

இதற்கு பதிலளித்த பிரதமர், கல்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்கு விரைவில் கணக்காளர் ஒருவரை நியமிக்கிறோம். இந்த விடயத்தில் குழப்பங்கள் இருப்பதால் நடுநிலை வகிக்கக் கூடிய தமிழ் நன்கு தெரிந்த சிங்களவர் ஒருவரை கணக்காளராக நியமிக்க நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்.

## காணிகளை...

டது. வலி. வடக்கு மீள்குடியேற்ற சங்கத்தின் ஏற்பாட்டில் வடக்கு கிழக்கு ஒருங்கிணைந்த குழுவால் இந்த கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, கடந்த 30 வருடங்களாக வலி. வடக்குப் பகுதியில் விடுவிக்கப்படாமல் இருக்கும் ஏனைய மூவாயிரம் ஏக்கர் காணிகள் விடுவிக்க வேண்டும் எனவும், மக்கள் அவர்களுடைய சொந்த காணிகளில் குடியமர்த்தி அரசாங்கம் அவர்களுக்கு வீட்டு திட்டத்தை வழங்க வேண்டும் என்றும் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் வலியுறுத்தினர்.

மேலும், வலி. வடக்கு பிரதேசமான - எமது சொந்த நிலத்திலிருந்து 30 வருடங்களுக்கு முன்னர் நாம் இடம்பெயர நிர்ப்பந்திக்கப்பட்டோம். இந்நிலையில், எமது நிலங்களை பிடித்த இராணுவம் அதனை உயர்பாதுகாப்பு வலயம் என அறிவித்து இன்றுவரை எம்மை மீளக் குடியமர அனுமதிக்கவில்லை. நாம், கடந்த 30 ஆண்டு காலமாக எமது வாழ்வாதாரங்களுக்காக வேறு தொழில் களிலேயே ஈடுபட்டு வருகிறோம். நாம் விவசாயத்தில் ஈடுபடும்விதமாக உடனடியாக காணிகளை அரசு விடுவிக்க வேண்டும்- என்றும் கூறினார்.

## சிறுவர்...

யங்களில் அனுமதிக்கப்பட்ட பிள்ளைகளின் எண்ணிக்கை 2018ஆம் ஆண்டு 281 ஆகக் காணப்பட்டது. இது 2019இல் 259 ஆகவும், 2020இல் 174ஆகவும், 2021இல் 158 ஆகவும் குறைவடைந்தது.

இந்நிலையில், நடப்பு ஆண்டின் முதல் 6 மாதங்களில் மட்டும் 246 சிறுவர்கள் அபிவிருத்தி நிலையங்களில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதில், யாழ்ப்பாணம் மாவட்டத் தில் 124 சிறுவர்களும் கிளிநொச்சியில் 62, முல்லைத்தீவில் 45, மன்னாரில் 7, வவுனியாவில் 8 சிறுவர்களும் இவ்வாறு சிறுவர் நிலையங்களில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இது குறித்து வடக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை ஆணையாளர் இ. குருபரன் கூறுகையில்,

"பொருளாதார நெருக்கடி காரணமாகவே பெற்றோர் தம்மால் பிள்ளைகளைப் பராமரிக்க முடியாது என்று கூறுகின்றனர். எமக்குக் கிடைக்கப்பெறும் ஒவ்வொரு கோரிக்கை தொடர்பிலும் கலந்துரையாடல் நடத்தப்பட்டு உண்மையில் பெற்றோரால் பராமரிக்க முடியாதுதான் என்பது உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே, வடக்கு மாகாணத்திலுள்ள பதிவு செய்யப்பட்ட சிறுவர் இல்லங்களில் அவர்கள் சேர்க்கப்படுகின்றனர்" - என்றார். (ஐ)

## பாதிக்கப்பட்...

ஒன்றை அனுப்பியுள்ளன.

இது குறித்து தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஒருங்கிணைப்பாளர் கு. சுரேந்திரன் விடுத்துள்ள செய்திக் குறிப்பில்,

22 செப்ரெம்பர் 2011 புதன்கிழமை அன்று தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் மாவை. சேனாதிராஜா, நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன், செல்வம் அடைக்கலநாதன், தர்மலிங்கம் சித்தர்த்தன், சுரேஷ் பிரேமச்சந்திரன், ந. சிறிகாந்தா ஆகியோர் ஒன்றிணைந்து ஐ. நா. மனித உரிமைகள் பேரவையில் அங்கம் வகிக்கும் பிரதான நாடுகளின் வெளிநாட்டு அமைச்சர்களுக்கும் ஐ. நா. மனித உரிமைப் பேரவை வதிவிடப் பிரதிநிதிகளுக்கும் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

அதில், பாதிக்கப்பட்ட தமிழர் தரப்பிலிருந்து கோரிக்கைகள் அடங்கிய கடிதம் தங்களுக்கு ஏற்கனவே நாங்கள் அனுப்பி வைத்திருந்த போதிலும் வெளிவந்திருக்கும் மாதிரிப் பிரேரணையில் எம்மால் முன்வைக்கப்பட்ட முக்கிய கோரிக்கையும் ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளர் அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்ட சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குக் குற்றவாளிகளைப் பாரப்படுத்த வேண்டுமென்ற விடயமும் உதாசீனம் செய்யப்பட்டுள்ளது என்பதை சுட்டிக்காட்டுகிறோம்.

அழிவுகளுக்கான அனுபவத்தை கொண்டவர்கள் நாம். சர்வதேச சமூகத்தின் செயலற்ற நிலையால் நாம் பாரிய விலை கொடுத்துள்ளோம். பல்லாயிரக்கணக்கான மக்கள் படுகொலை செய்யப்பட்டும், வலிந்து காணாமலும் ஆக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதியைப் பெற்றுக் கொள்ளும் முகமாக மனித உரிமைப் பேரவையால் முன்வைக்கப்படும் பிரேரணையில் நமது கோரிக்கைகள் உள்ளடக்கப்படாமல் இருப்பதை அவதானிக்கிறோம்.

இந்த இக்கட்டான சூழ்நிலையில் பாதிக்கப்பட்ட தரப்பினர் கோரிக்கைகளை மாத்திரமல்லாமல் ஐ. நா. உயரதிகாரிகளின் பரிந்துரைகளையும் உதாசீனம் செய்யாது சமர்ப்பிக்கப்பட இருக்கும் பிரேரணையில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குக் குற்றவாளிகளை பாரப்படுத்தும் எமது பிரதான கோரிக்கையை உள்ளடக்குமாறு மீண்டும் வலியுறுத்துகிறோம் என்று குறிப்பிட்டுள்ளனர் - என்றுள்ளது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# இலங்கையின் இனப்படுகொலையை பிரித்தானியா அங்கீகரிக்கவேண்டும்

## அந்த நாட்டு எம். பிக்கள் கோரிக்கை

லண்டன், செப். 24

**இலங்கையில் இடம்பெற்ற தமிழ் இனப்படுகொலையை அங்கீகரிக்க வேண்டும். அத்துடன், போர்க் குற்றங்களில் தொடர்புடைய இலங்கை சிரேஷ்ட அதிகாரிகளுக்கு தடைவிதிக்கவேண்டும் என வலியுறுத்தி பிரித்தானிய லிபரல் ஜனநாயகக் கட்சியின் தலைவர் எட் டேவி மற்றும் ரிச்மண்ட் பார்க் பாராளுமன்ற உறுப்பினர் சாரா ஒல்னி ஆகியோர் புதிதாக நியமிக்கப்பட்ட வெளியுறவு செயலாளர் ஜேம்ஸ் கிளேவர்லிக்கு கடிதம் எழுதியுள்ளனர்.**

ஐ.நா மனித உரிமைகள் பேரவை அமர்வின் 51ஆவது கூட்டத் தொடர் நடைபெற்று வரும் நிலையில் இலங்கையின் போர்க்குற்றங்களுக்கு பொறுப்புக் கூறுவதில் உள்ளூர் பொறிமுறை தோல்வியடைந்துள்ளதாக அவர்கள் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தங்கள் மீதான குற்றங்களை மறுப்பது, பொறுப்புக் கூறாது இழுத்தடிப்பது. தாமதப்படுத்துவது ஆகியவற்றின் மூலம் பொறுப்புக் கூறலில் இருந்து ஸ்ரீலங்கா தப்பிக்கொள்ள முற்படுவது குறித்து நாங்கள் கவலையடைகிறோம் எனவும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் முன்னாள் ஆணையாளரின் அறிக்கையில் இலங்கை மீது கடும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அதில் போர்க்குற்றங்களில் ஈடுபட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தண்டனை விலக்குப் பெற்றுள்ளனர். கடுமையான மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளில் சிக்கியவர்கள் அரச உயர் பதவிகளில் நியமிக்கப்பட்டுள்ளனர் என குறிப்பிடப்பட்டுள்ளதை அவர்கள் அடிக்கோடிட்டுக் காட்டியுள்ளனர்.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் சமீபத்திய வரைவுத் தீர்மானம், இந்த தோல்வியை ஏற்றுக் கொண்டுள்ளது. எனினும் காணாமல் போனோர் அலுவலகம் போன்ற உள்நாட்டு பொறிமுறைகளை செயற்படுத்த தீர்மானம் அழைப்பு விடுக்கிறது என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

போர்க்குற்றங்களை இழைத்தவர்கள் உரிய முறையில் விசாரணைக்கு உட்படுத்தப்படவேண்டும். தங்களது குற்றங்களுக்கு அவர்கள் பொறுப்புக்கூற வேண்டும் என்பதை இலங்கை ஜனாதிபதி விக்கிரமசிங்கவுக்கு பிரிட்டன் அரசு தெளிவுபடுத்துவது மிகவும் முக்கியமானது.

அட்டூழியங்கள் தனிநபர்கள் ஈடுபட்டமைக்கான சான்றுகள் இருந்தால் அவர்களுக்கு எதிரான தடைகளை விதிக்க பிரித்தானிய அரசாங்கம் நடவடிக்கை எடுப்பது இன்றியமையாதது என்று அவர்கள் மேலும் கூறியுள்ளனர்.

ஐ.நா ஆணையாளரின் பரிந்துரைக்கு பிரித்தானிய அரசாங்கம் செவிசாய்க்க தவறிவிட்டதாக விமர்சனங்கள் உள்ளன. போர்க் குற்றங்கள் அல்லது மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டுள்ள இலங்கை அதிகாரி மீது இதுவரை பிரித்தானியா எந்த தடையும் விதிக்கவில்லை.

இந்நிலையில் கனேடிய பாராளுமன்றத்தில் தமிழினப் படுகொலை அங்கீகரிக்கப்பட்டது போன்று பிரித்தானிய பாரளுமன்றமும் தமிழ் இனப்படுகொலையை அங்கீகரிக்கவேண்டும் எனவும் பிரித்தானிய லிபரல் ஜனநாயகக் கட்சியின் தலைவர் எட் டேவி மற்றும் ரிச்மண்ட் பார்க் பாராளுமன்ற உறுப்பினர் சாரா ஒல்னி ஆகியோர் தமது கடிதத்தில் வலியுறுத்தியுள்ளனர். (அ)



# அமெரிக்க ஜனாதிபதி பைடனை சந்தித்தார் அமைச்சர் அலி சப்ரி!

நியூயோர்க், செப். 24

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் மற்றும் முதல் பெண்மணி ஜில் பைடன் ஆகியோரை இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி சந்தித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 77ஆவது அமர்வின்போது ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இரவு விருந்தில் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

நியூயோர்க்கில் நடைபெறும் ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையின் 77ஆவது அமர்வில், இலங்கையின் அறிக்கையை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி இன்று சனிக்கிழமை சமர்ப்பிக்கவுள்ளார்.

ஐ.நா. உறுப்பு நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களுடனும் அவர் இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)






# பயங்கரவாதத் தடை சட்டத்துக்கு எதிராக கொழும்பு நீதிமன்றம் முன் கையெழுத்து!

கொழும்பு, செப். 24

பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிராகக் கையெழுத்துத் திரட்டும் போராட்டம் இன்று கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்துக்கு முன்பாக முன்னெடுக்கப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், சட்டத்தரணிகள், சட்டக்கல்லூரி மாணவர்கள், சர்வமதத் தலைவர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் இதில் பங்கேற்றனர்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிராகக் கையெழுத்துத் திரட்டும் போராட்டம் இன்று காலை களுத்துறையிலும், அதைத் தொடர்ந்து காலி மற்றும் மாத்தறை ஆகிய பகுதிகளிலும் முன்னெடுக்கப்படவுள்ளது. (அ)

# அமெ. உயர் அதிகாரி இலங்கைக்கு விஜயம்

கொழும்பு, செப். 24

ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய முகவர் நிலையங்களுக்கான அமெரிக்காவின் தூதுவர் சின்டி மெக்கெய்ன் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

நாளை ஞாயிற்றுக்கிழமை இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ள அவர் 28ஆம் திகதி இலங்கையில் தங்கியிருப்பார் என தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பில் உள்ள சிரேஸ்ட அரசாங்க அதிகாரிகள் மற்றும் உதவி நிறுவன அதிகாரிகளை அவர் இதன்போது சந்தித்து பேசவுள்ளார்.

அத்துடன், மத்திய மாகாணத்திற்குச் சென்று பாடசாலைகள், விவசாய ஆராய்ச்சி வசதிகள் மற்றும் சமூக அமைப்புகளின் செயற்பாடுகள், இலங்கை அரசாங்கத்தின் மற்றும் அமெரிக்க அரசாங்கத்தின் உதவி திட்டங்கள் குறித்து ஆராயவுள்ளார்.

ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பு, சர்வதேச விவசாய மேம்பாட்டு நிதி மற்றும் உலக உணவுத் திட்டம் ஆகிய மூன்று ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய நிறுவனங்களுக்கு அமெரிக்கா மிகப்பெரிய அளவில் நன்கொடைகளை வழங்கி வருகிறது.

அமெரிக்க நிதியுதவியுடன் கூடிய ஐக்கிய நாடுகளின் திட்டங்கள், நாடுகளின் உணவுப் பாதுகாப்பு, மனிதாபிமான நிவாரணம், வாழ்வாதாரப் பாதுகாப்பு மற்றும் விவசாயம் சார்ந்த பொருளாதார வளர்ச்சியை முன்னேற்றுவதற்கு ஒத்துழைப்புகளை வழங்கி வருகின்றது. (அ)

# கோதுமை மாவின் விலை குறைவதற்கு சாத்தியம்!

கொழும்பு, செப். 24

முன்பதிவு செய்யப்பட்ட கோதுமை மா துறைமுகத்துக்கு வந்துள்ளதால் அடுத்த வாரம் முதல் கோதுமை மாவின் விலை குறையும் என இறக்குமதியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

துருக்கி மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸில் இருந்து முன்பதிவு செய்யப்பட்ட கோதுமை மா கடந்த வாரம் நாட்டுக்கு வந்துள்ளது.

மேலும் கடந்த மாதங்களில் கோதுமை மா இறக்குமதி நிறுவனங்கள் முன்பதிவு செய்யாமையினால், நாட்டில் கோதுமை மாவுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டதுடன், ஒரு கிலோகிராம் கோதுமை மாவின் விலை 350-400 ரூபா வரை அதிகரித்தது.

எவ்வாறாயினும், கொழும்பு 4ஆம் குறுக்குத் தெரு இறக்குமதியாளர்கள் கோதுமை மாவை முன்பதிவு செய்து கையிருப்பு பெறுவதால் கிலோ ஒன்றின் விலை 300 ரூபாவுக்கும் குறைவடையும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (அ)




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 24.09.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.